பக்கங்கள்:-33


காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 31 | சனிக்கிழமை | 13.04.2024 | அதிர்வு 256




# பொது வேட்பாளர் விவகார முதல் சந்திப்பே ஏமாற்றம்!

## அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வரிசையில் விக்கி மாத்திரம் கலந்துகொண்டு புலம்பினார்



(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வரிசையில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் மாத்திரமே கலந்துகொண்டார். வேறு எந்தவொரு அரசியல்வாதியும் மேற்படி சந்திப்பில் பங்கேற்கவில்லை. 07

# தமிழர் இருப்பை நிலைநிறுத்த பொது வேட்பாளர் அவசியமாம்

## சுமந்திரனை மறைமுகமாகச் சாடி தவராசா அறிக்கை

"இன்றைய அரசியல், பொருளாதார சூழமைவுகளில் தமிழ் மக்கள் தங்கள் இருப்பை நிலை நிறுத்தவும், உரிமைக் கோரிக்கைக்கான ஒரு குரலாகவும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை முன்வைப்பது பொருத்தமாக இருக்கும்."

– இவ்வாறு இலங்கைத்தமிழரசுக்கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"காலங்காலமாக நாங்கள் ஜனாதிபதித் தேர்தல்களில் யாரேனும் ஒரு பெரும்பான்மைக் கட்சியின் வேட்பாளரையே ஆதரித்து வந்துள்ளோம். 06



# கோழைகள் போல் ஓடி ஒளியாமல் பகிரங்க விவாதத்துக்கு வாருங்கள்

## அநுரவுக்கு சஜித் மீண்டும் சவால்



"நாடு வங்குரோத்தடைந்துள்ள வேளையில், நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை மக்கள் ஆணையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதிலிருந்து எவராலும் தப்ப முடியாது, விவாதங்களும், வாதங்களும், தர்க்கங்களும், கலந்துரையாடல்களும் நடக்க வேண்டும். முன்மொழிவுகள், பார்வைகள் மற்றும் வேலைத்திட்டங்களை முன்வைக்காமல் எதனையும் பெற முடியாது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் 06




நேற்று 'மாலை முரசு' இணையத்தில் தரவேற்றம் செய்து ஒரு பத்து நிமிடத்தில் ஓர் அன்பரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

"இரண்டாம் பக்கத்தில் வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத் தெரிவுக் கூட்டத்துக்குள் அழையா விருந்தாளியாக நுழைந்த சிவசேனை; எதிர்ப்பு தெரிவித்து வெளியேறிய மக்கள்' என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிட்டு இருக்கின்றீர்கள். அதை ஒட்டி ஒரு பழைய விளம்பரத்தின் பிரதியை 'வட்ஸ்அப்'பில் உங்களுக்கு அனுப்பி உள்ளேன். பாருங்கள். பிறகு பேசுகிறேன்." – என்றார் அந்த அன்பர்.

விளம்பரத்தைப் பார்த்தேன்.

மேற்படி வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தின் 2024 – 2025 06

# ஜனாதிபதியினால் சிறுவர் இல்லங்களுக்கு தமிழ் - சிங்களப் புத்தாண்டை ஒட்டிப் பரிசு

தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய நாடளாவிய ரீதியிலிருக்கும் சிறுவர் மேம்பாட்டு நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர் இல்லங்களுக்கு இனிப்புப் பண்டங்கள் மற்றும் பரிசுப் பொதிகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வீடுகள் அல்லது பெற்றோரின் அரவணைப்பு கிடைக்காவிட்டாலும் சகல பிள்ளைகளுக்கும் புத்தாண்டு மகிழ்ச்சி கிட்ட வேண்டும் என்ற நோக்கில், “சிறுவர் இல்லக் குழந்தைகளுக்கும் புத்தாண்டு“ என்ற தொனிப்பொருளின் கீழ் ஜனாதிபதி அலுவலகம், “சிலோன் பிஸ்கட் கம்பனி” மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியிலிருக்கும் 336 சிறுவர் மேம்பாட்டு நிலையங்களில் பராமரிக்கப்படும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான பிள்ளைகளுக்கு ஜனாதிபதியின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியுடன் இனிப்பு பண்டங்களும் பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்படுகிறது.

இதுவரை காலமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நுவரெலியாவிருக்கும் சிறுவர் இல்லங்களுக்கு புத்தாண்டு பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டுவரும் நிலையில், இம்முறை அந்த திட்டத்தை நாடளாவிய ரீதியில் உள்ள சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்படும் பிள்ளைகளுக்கு பரிசுகளையும் இனிப்புப் பண்டங்களையும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# காணித் தகராறில் தம்பியை அடித்துக் கொன்ற அண்ணன்

## கலஹாவில் கொடூரம்




கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நில்லம்பை யோகலெட்சுமி தோட்டத்தில் அண்ணன் ஒருவர் தனது தம்பியை அடித்துக் கொலை செய்துள்ளார்.

கிருஷ்ணசாமி கருணாநிதி என்ற 32 வயதான நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய அண்ணன் சில தினங்களுக்கு முன்னர் சிறைச்சாலையில் இருந்து வந்துள்ளார். அதன்பின்னர் அநுராதபுரம் பகுதியில் கூலி வேலை செய்துவந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஊருக்கு வந்துள்ளார்.

அண்ணனுக்கும், தம்பிக்கும் இடையில் காணிப் பிரச்சினை இருந்து வந்த நிலையில், அது தொடர்பில் நேற்றுமுன்தினமும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதையடுத்து இரவு அது சண்டையாக மாறியுள்ளது.

இதன்போது அண்ணன் கத்தி மற்றும் போத்தலால் தம்பியின் தலைப்பகுதியில் தாக்கிய நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். கைகள் கட்டப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம், பிரேத பரிசோதனைக்காக பேராதனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் அண்ணன் தப்பிச் செல்ல முற்பட்டபோது நில்லம்பை பஸ் நிலையத்தில் வைத்து அவரை ஊர் மக்கள் மடக்கிப் பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் மற்றும் கம்பளை தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மருதமுனையில் நேற்று மாலை பல வாகனங்கள் மோதி விபத்து

(எம்.எம்.றம்ஸீன்)

மருதமுனை பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்திக் கார், மோட்டார் சைக்கிள், ஓட்டோ, பஸ் என்பன ஒன்றுடன் ஒன்று மோதியதில் சிலர் காயமடைந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை மட்டக்களப்பில் இருந்து நிந்தவூர் பிரதேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்த கார் மருதமுனை பிரதான வீதியில் திரும்ப எத்தனித்த போது, அந்த வீதியில் சென்று கொண்டிருந்த ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், ஓட்டோ, பஸ் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து ஏற்பட்டது என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

மோட்டார் சைக்கிள், ஓட்டோவில் வந்தவர்கள் விபத்தில் காயமடைந்து வைத்திசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது, சீரற்ற காலநிலை நிலவுவதால் வீதிகளை பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும் சாரதிகள் அவதானத்துடன் செயல்படுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

# கோழி இறைச்சி விலை அதிகரிப்பு



பொருளாதார மத்திய நிலையங்களில் கோழி இறைச்சியின் சில்லறை விலை அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் சில்லறை விலை 1,400 ரூபாவாகும்.

இதேவேளை, தோல் நீக்கப்படாத கோழி இறைச்சி 1,300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் முறையை திருத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் நீடிப்பு



தேர்தல் முறையை திருத்துவதற்கான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் ஜூன் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் மாதவ தேவசுரேந்திர குறிப்பிட்டார்.

2023 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவின் பதவிக்காலம் இம்மாதம் 15 ஆம் திகதி நிறைவடையவிருந்தது.

இதேவேளை, தேர்தல் முறைமை திருத்துவது தொடர்பில் மூன்று உப குழுக்களின் அறிக்கைகளைப் பெற்று ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக செயலாளர் மாதவ தேவசுரேந்திர குறிப்பிட்டார்.

தேர்தல் முறை தொடர்பான அரசமைப்புச் சட்ட முன்மொழிவுகளை ஓர் உப குழு பரிசீலித்துப் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

ஊடகப் பிரதிநிதித்துவம், பெண்களின் பிரதிநிதித்துவம் போன்ற விடயங்களை மற்றுமொரு உப குழு ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்கவுள்ளது.

மூன்றாவது உப குழு, தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தல் நடத்தை விதிகளை தயாரித்தல் மற்றும் வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் பங்கு தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்கும் என ஆணைக்குழுவின் செயலாளர் மாதவ தேவசுரேந்திர குறிப்பிட்டார்.

தேர்தல் முறையை திருத்துவதற்கான பரிந்துரைகளை சமர்பிப்பதற்காக, முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்திருந்தார்.

# மது போதையில் வாகனங்கள் செலுத்துவோரை கைது செய்யும் பொலிஸாருக்குப் பணப்பரிசில்!

மது போதையில் வாகனம் செலுத்துபவர்களைக் கைது செய்யும் பொலிஸாருக்கு பணப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் ஒருவரை கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு 5000 ரூபா வழங்கப்படும் என போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

அத்துடன், மது போதையில் வாகனம் செலுத்தும் ஒருவரை கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு விசேட சான்றிதழும் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புத்தாண்டு காலப்பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்துவோரை கண்டறிவதற்காக அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் 1,50,000 இரத்த பரிசோதனை கருவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

604 பொலிஸ் நிலையங்களுக்கு இந்த இரத்த பரிசோதனை கருவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன எனவும் போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்தார்.



அதேபோன்று, மது போதையில் வாகனம் செலுத்துபவர்களை அடையாளம் காண்பதற்கான சிறுநீர் பரிசோதனை உள்ளிட்ட விசேட பயிற்சிகள் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்காக 1500 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் மே மாதத்திற்குள் வெளியிடப்படும்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் மே மாதத்திற்குள் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகள் மீதான மீள் பரிசீலனை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், விசேட தேவையுடைய விண்ணப்பதாரர்களின் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர் தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் 4 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெற்றது.

பரீட்சையில் 3 லட்சத்து 42 ஆயிரத்து 883 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.







# புதுவருடத்துக்கு முந்தைய வர்த்தகம் யாழ். மாவட்டத்தில் இம்முறை 'டல்'!

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ் மாவட்டத்தில் புதுவருடத்துக்கு முந்தைய வர்த்தகம் வழமைக்கு மாறாக, சோபையிழந்து காணப்பட்டது.

தமிழ் – சிங்களப் புத்தாண்டு இன்றைய தினம் கொண்டாடப்படும் நிலையில் யாழ் நகரில் நேற்றைய தினம் புது வருட வியாபாரம் சோபையிழந்து காணப்பட்டது

பொதுமக்கள் புத்தாடைகள் மற்றும் பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கு ஆர்வம் காட்டாததை காண முடிந்தது.

யாழ் நகரக் கடைகள் அனைத்தும் வெறிச்சோடி காணப்படும் நிலையில், வியாபார நடவடிக்கைகள் குறைவடைந்துள்ளன என வியாபாரிகளும் கவலை வெளியிட்டுள்ளனர்.









## அதிக கட்டணம் அறவிடும் பஸ்களை கண்டறியச் சோதனை நடவடிக்கை!



அதிக கட்டணம் அறவிடும் தனியார் பஸ்களைக் கண்டறிவதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

பயணிகளிடம் இருந்து கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சசி வெல்கம தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தில் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்பவர்களிடம் தனியார் பஸ்கள் அதிக கட்டணம் அறவிடுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு ஏதேனும் அசௌகரியம் ஏற்படுமாயின் பயணிகள் 1955 என்ற இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## சீன அரசின் நிதியுதவியில் 1,996 வீடுகள் நிர்மாணம்



சீன அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மா அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா குறிப்பிட்டார்.

கொட்டாவ, மஹரகம, பேலியகொட, தெமட்டகொட, மொரட்டுவை பகுதிகளில் இந்த வீடமைப்புத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் 1,996 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்காக சீன அரசாங்கம் 24.48 பில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

நிர்மாணப் பணிகளை இரண்டரை வருடங்களில் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர் குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்காக இந்த வீட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

# 2.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை 2025 இல் இலங்கை எட்டிப்பிடிக்கும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி மதிப்பீடு

2025 ஆம் ஆண்டில் இலங்கை 2.5 வீத பொருளாதார வளர்ச்சி வீதத்தை எட்டும் என ஆசிய அபிவிருத்தி வங்கி கணித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தியின் மதிப்பீடு குறித்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் பிரகாரம், இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டு 1.9 வீதம் மிதமான வளர்ச்சியைக் காண்பிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையான பொருளாதார சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதிலும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதிலும் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான அறிகுறிகள் தென்பட்டாலும், அதற்கான சீர்திருத்தங்களின் வேகத்தை தக்கவைக்க வேண்டியதன் அவசியம் காணப்படுவதாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கி வலியுறுத்தியுள்ளது.




# நுவான் டி சில்வா ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக நியமனம்









ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளராக அண்மையில் நியமனம் செய்யப்பட்ட சட்டத்தரணி நுவான் டி சில்வாவிற்கு வாழ்த்துக்களை தெரிவிக்க நேற்று பொது மக்கள் அவரது கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள இல்லத்தில் ஒன்று கூடினர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு சட்டத்தரணி நுவான் டி சில்வா கருத்து தெரிவிக்கையில் –

"பொது மக்கள் நாட்டில் ஒரு மாற்றத்திற்காக ஆர்வமாக உள்ளனர். மேலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்றும் வெற்றி உறுதிசெய்யப்படும் என்றும் எதிர்பார்க்கின்றனர்.

ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் முன்னணியினர் தற்போது மேற்கொண்டு வரும் தவறான பிரசாரங்களை நம்ப வேண்டாம், நாட்டில் தற்போது நிலவும் நிலைமை குறித்து விழிப்புடன் இருந்து சரியான போக்கை ஆதரிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றேன்." – என்றார்.

இந்த நிகழ்வில், ஐக்கிய மக்கள் சக்தியின் மேற்கு கொழும்பு அமைப்பாளர் ஜீவக பெரேரா மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் வெள்ளவத்தை வடக்கு அமைப்பாளர் விஜயகுமாருடன் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# வெற்றிலை பறிக்க முற்பட்டவர் கிணற்றில் தவறி வீழ்ந்து சாவு!

பலாங்கொடை பகுதியில் வெற்றிலை பறிப்பதற்காக மரத்தில் ஏறிய நபர் ஒருவர் அருகிலிருந்த கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். 52 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர், தமிழ் – சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வெற்றிலை பறிப்பதற்காகத் தோட்டத்தில் உள்ள 40 அடி உயரமுடைய மரமொன்றில் ஏறி வெற்றிலை பறிக்க முயன்றுள்ளார்.

இதன்போது, அந்த மரத்தின் கிளை ஒன்று முறிந்து வீழ்ந்துள்ள நிலையில் மரத்தில் ஏறியிருந்தவர் அருகிலிருந்த கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆம் ஆண்டுக்கான புதிய ஆலய பரிபாலன சபை தெரிவு பற்றியது அது.

12-04-2024 அன்று காலை 10.30 மணிக்கு நெடுங்கேணி ஒலுமடு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறும் அக் கூட்டத்துக்கு 'அனைத்து அடியார்களையும் அழைக்கின்றோம்' என்று ஆலய பரிபாலன சபை அந்த விளம்பரத்தில் தெரிவித்திருந்தது.

சற்று நேரத்தில் அன்பர் அழைப்பு எடுத்தார். அவர் பேச முன்னரே நான் பதில் கூறத் தொடங்கி விட்டேன்.

'அழையா விருந்தாளியாக' என்று தலைப்புத் தவறுதான் என்றேன். நாளை (இன்று) அதனைத் திருத்துவேன் என்றும் கூறினேன். அதனால்தான் இந்தக் குறிப்பு.

இவ்விடயத்தை ஒட்டி மறவன்புலவு சச்சிதானந்தன் தரும் விவரமான விளக்கம் இன்னொரு பக்கத்தில் தனியாகப் பிரசுரமாகியுள்ளது.

\+ \+ \+

சபாஷ் சரியான போட்டி....!

பொது வேட்பாளர் நிறுத்துவது தொடர்பான விடயத்தை ஒட்டி தமிழரசுக் கட்சிக்குள் நடப்பதைத்தான் இப்படிக் கூறுகிறேன்.

பொதுவேட்பாளர் விவகாரம் சரிவராது என்று கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்து விட்டார். மார்ச் 23 இலேயே தனியார் சமூக ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதைக் குறிப்பிட்டார்.

ஓரிரு கிழமைகள் கழித்து அதே விடயத்தை சுமந்திரனும் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற தமிழரசு அணியில் அதன் முன்னாள் மட்டக்களப்பு எம்.பியான அரியநேத்திரனும் ஒருவர்.

"தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்ப்பவர்கள் பெரும்பான்மையினத்தில் எந்த வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்பதை வெளிப்படையாக கூற முடியுமா?" - என்று சவால் விடுத்துள்ளார் அரியநேத்திரன்.

இதற்கு பதில் கேள்வி ஒன்று கேட்டு இருக்கின்றார் சி.வி.கே.சிவஞானம்.

"அதற்கு முதல் நீங்கள் குறிப்பிடும் பொது வேட்பாளர் யார் என்பதைக் கூற முடியுமா?" - என்று சிவஞானம் கேள்வி எழுப்பினார்.

'சபாஷ்... சரியான போட்டி!' என்று நான் சொல்வது சரிதானே நண்பர்களே...?

அதையும் தாண்டி இன்னொரு விடயம் கட்டவிழ்வதையும் அவதானிக்க முடிகின்றது. பொது வேட்பாளர் திட்டத்துக்கு எதிராக சுமந்திரன் கருத்து வெளியிட்டுவிட்டார் அல்லவா? கட்சிக்குள் 'சுமந்திரன்போமியா' நோய் உள்ளவர்களுக்கெல்லாம் அது சூட்டைக் கிளப்பி விட்டுவிட்டது என்று தெரிகின்றது. 'பொது வேட்பாளரை நிறுத்தினால் மட்டுமே தமிழ்த் தேசியம் தப்பிப் பிழைக்கும் இல்லையேல் பேரினவாதம் வெற்றி பெற்றுவிடும்' என்று தேசியப் புலம்பல் தொடங்கி விட்டது.

பொதுவேட்பாளரை நிறுத்தினால் பேரினவாதம் தோற்கும் என்ற நம்பிக்கையை ஒரு தடவை பரீட்சிக்க அனுமதிப்பதும் நல்லதுதான்.

சுமந்திரனை அடிப்பதாக நினைத்துக் கொண்டு குத்துவிளக்கோடும், மானோடும் அணி சேர்கின்றார்கள்.

அந்தத் திசையில் ஓடவிட்டு விட்டு, ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் பேசுவது தான் இந்த 'சுமந்திரன்போமியா' நோய்க்கு நல்ல மருந்தாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

விட்டுப் பிடிப்பது விடியலைக் காட்டும்...!

# புதுக்குடியிருப்பில் நீரில் மூழ்கி குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் வீதிக்கு அமைக்கப்பட்ட பாலத்துக்குக் கீழ் தேங்கி நிற்கும் நீரில் குளித்த ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

கைவேலி பகுதியில் வீதியில் அமைக்கப்பட்ட பாலத்துக்குக் கீழ் சுமார் பத்து அடி பள்ளத்தில் நீர் தேங்கி இருக்கின்றது. அந்தப் பாலத்தில் அப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழமையாக குளித்து வந்த நிலையில், நேற்றுமுன்தினம் அந்த இடத்தில் குளித்தபோது நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

தேவிபுரம் பகுதியைச் சேர்ந்த முனிசாமி திருச்செல்வம் என்ற 57 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழர் இருப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், அது எத்தகைய மோசமான முடிவென்பதை வரலாறு பட்டுணரச் செய்த பின்னும் கூட, இன்னும் அதிலிருந்து பாடம் கற்கத் தயாரற்றவர்களாகவே நாம் உள்ளோம். எமது இனத்தை அழித்த இறுதிப்போரை முன்னின்றி நடத்திய சரத் பொன்சேகாவையும், அந்த இறுதிப் போரின் கடைசி நாள்களில் பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பு வகித்த மைத்திரிபால சிறிசேனவையும், கடந்த தேர்தலில் சஜித் பிரேமதாஸவையும் ஆதரித்து கடைசியில் என்ன கண்டோம்?

அவர்கள் எங்கள் வாக்குகளைப் பெற்று விட்டு, சராசரிப் பேரினவாதப் போக்குடனேயே தமிழர் பிரச்சினைகளை அணுகினரே தவிர, எமது வாக்குகளும் அவர்களின் வெற்றிக்குக் காரணம் என்ற நன்றி சிறிதும் காட்டவில்லை.

இப்படி பேரினவாதக் கட்சி களமிறக்கும் வேட்பாளர்களுக்கு நம்பி வாக்களித்து ஏமாறுவதை இனியும் தொடர்வது இனத்தின் இருப்புக்கு ஆரோக்கியமல்ல. அப்படியானால் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது ஆரோக்கியமானதா? என்ற கேள்வி எழலாம். தமிழ்க் கட்சிகளால் ஒரு பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட்டால், ஒட்டுமொத்த தமிழ்மக்களின் வாக்குகளும் சிந்தாமல் சிதறாமல் கிடைத்தாலும் கூட அந்த வேட்பாளரால் வெற்றி பெற முடியாதென்பது வெளிப்படையானதே.

ஆனாலும், அந்தத் தோல்வியிலும் நாம் சில வெற்றிகளை அடைய முடியும். தமிழர்கள் சிங்கள ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையிழந்து விட்டார்கள் என்பதையும், தமிழ் மக்களின் அபிலாஷை இலங்கையின் பெரும்பான்மைப் போக்குக்கு மாறானது என்பதையும், உரிமைக்கான எமது ஒன்றுபட்ட வேட்கையையும் பொது வேட்பாளருக்குத் திரளாக வாக்களிப்பதன் மூலம் நாம் உணர்த்தமுடியும்.

அப்படி அவர்கள் உணராவிட்டாலும் அது குறித்து நாம் கவலையடையத் தேவையில்லை. ஏனெனில் பேரினவாதக் கட்சிகளின் வேட்பாளருக்கு வாக்களித்தாலும் ஏதும் அதிசயம் நிகழ்ந்துவிடப்போவதில்லையே? ஆனால், இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல், பேரினக்கட்சிகளின் வேட்பாளரை ஆதரிக்கும் கருத்து நிலையை தமிழ் மக்களிடம் சிலர் விதைக்க முனைகின்றனர்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருதுகோள் முளையில் இருக்கும்போதே, அது ராஜபக்ஷக்களின் சதி என்று பதறுகின்றனர். தங்களின் திட்டங்கள் பாழாகிவிட்டமையும், கிடைக்க வேண்டிய வரப்பிரசாதங்கள் இல்லாமல் போய்விடுமோ என்ற ஆதங்கமுமே இந்தப் பதற்றத்துக்கு மிக முக்கியமான காரணங்கள்.

ஆனால், உண்மையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை எதிர்ப்பவர்கள் பேரினவாத ஆட்சியாளர்கள் வெல்வதற்கே துணைசெய்கின்றார்கள் என்பதே உண்மை. மீண்டுமொருமுறை மக்களைப் படுகுழிக்குள் தள்ளிவிடவே இவர்கள் எத்தனிக்கின்றனர்.

எனவே, இந்தத் திசை மாற்றல்களுக்கு எடுபடாமல், பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவோடு ஒன்றித்து, எமது உரிமைக்குரலை உலகறியச் செய்வதே காலப் பொருத்தம்.

இது என்னுடைய தனிப்பட்ட கருத்து மாத்திரமே. தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்து கட்சியே இறுதி முடிவெடுக்கும், அந்த முடிவு கடந்த காலங்களைப் போல மீண்டும் இருண்ட யுகத்துக்குள் எமது இனத்தை மூழ்கடிக்காமல், ஒளிமயமானதாக, தீர்க்கமானதாக அமைய வேண்டும்." - என்றுள்ளது.

## கோழைகள் போல் ஓடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 154 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், மொனராகலை, வெல்லவாய, தனமல்வில, கெத்சிரிகம கனிஷ்ட வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சர்வதேச சமூகத்தின் தலைவர்கள் சந்திக்கும்போது தனிப்பட்ட சந்திப்புகள் கூட நடக்கின்றன. மொழித்திறன் இல்லை என்றால் இங்கு ஒன்றும் செய்ய முடியாது. இவ்வாறான திறமை இல்லாதவர்களுக்கு நாட்டின் தலைமைத்துவத்தை வழங்குவது மீண்டும் பாதாளத்தில் விழுவதைப் போன்றதாகும்.

விவாதம் நடத்த நான் எந்நேரத்திலும் தயாராக இருக்கின்றேன். இவ்வாறான விவாதங்களில் இருந்து தப்பியோட வேண்டாம்.

பொருளாதார நெருக்கடி தொடர்பில் எனது பொருளாதார கொள்கை வகுப்பாக்கக் குழுவினரோடு மாற்று அணியின் பொருளாதாரக் குழுக்களையும் ஒன்றிணைத்து விவாதம் நடத்துவோம் என நாகரிகமாக அழைக்கும்போது, கோழைகள் போன்று விவாதங்களில் இருந்து தப்பியோட வேண்டாம் எனப் புரட்சித் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்." - என்றார்.

# மொட்டுவின் 12 எம்.பிக்கள் ஐ.தே.கவில் சங்கமமாவர்?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பிரசன்ன ரணதுங்க, மஹிந்தானந்த அளுத்கமகே, ஷெஹான் சேமசிங்க, ரமேஷ் பத்திரன, காஞ்சன விஜேசேகர, பிரமித பண்டார தென்னகோன் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுடன் எஸ்.பி திஸாநாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, பந்துல குணவர்தன, சுசில் பிரேமஜயந்த மற்றும் விதுர விக்கிரமநாயக்க ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியில் சங்கமாகவுள்ளனர் என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற் குறிப்பிட்டவர்களில் பலர் தற்போதைய அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்து வருகின்றனர்.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இது முற்றிலும் பொய்யான தகவல் எனத்வ்தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குள் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் முரண்பாடுகள் எழுந்துள்ளன.

ஒரு தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் மற்றுமொரு தரப்பினர் கட்சி சார்பில் ஒருவரை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த விவகாரத்தால் மொட்டுக் கட்சி பிளவுப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி தேர்தல் மற்றும் வேட்பாளர் குறித்து அந்தக் கட்சியில் தலைவர்கள் மௌனம் காத்து வருகின்றனர்.

## பொதுவேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் கூட்டத்தின் நிறைவில் விக்னேஸ்வரன் எம்.பி. ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:-

"பொது வேட்பாளர் தொடர்பில் கலந்துரையாட இன்று (நேற்று) நாங்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டினோம். அதிலே சிவில் சமூகத்தினர் மற்றும் யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் பங்கு பற்றினார்கள். ஆனால், பலவித காரணங்களால் அரசியல் தலைவர்களால் வர முடியாமல் போய்விட்டது.

ஆனால், சிறிதரன் எம்.பிக்கு இந்தக் கூட்டத்துக்கு வருவதற்கு விருப்பம் இருந்தது. எனினும், வவுனியாவில் ஒரு கூட்டம் மற்றும் கிளிநொச்சியில் ஒரு கூட்டம் இருப்பதாகச் சொல்லியிருந்தார். செல்வம் அடைக்கலநாதன் வெளிநாடு சென்றிருக்கின்றார். சுரேஷ் பிரேமச்சந்திரன் வருவதாகக் கூறினார். ஆனாலும், அவராலும் வர முடியாமல் போனது.

இவ்வாறான சில பிரச்சினைகள் இருந்ததால் அரசியல்வாதிகள் அதிகம் வரவில்லை. நான் மட்டும்தான் ஒரு அரசியல்வாதியாக இருந்தேன். ஆனால், சிவில் சமூகத்தினர், ஊடகத்தினர், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் இங்கே வந்திருந்தார்கள்.

வந்திருந்தவர்களிடத்தே பொது வேட்பாளர் சம்பந்தமான கருத்துக்களை நாங்கள் கேட்டறிந்தோம். அதாவது வந்திருந்த எல்லோருமே பொது வேட்பாளரை நிறுத்துவதன் அவசியம் தற்போது தமிழ் மக்களுக்கு இருக்கின்றது என்பதைக் கூறி அதை ஏற்றுக்கொண்டார்கள்.

இனி அடுத்த கூட்டத்திலே நாங்கள் கூடி இதிலே அரசியல் தலைவர்களையும் சேர்த்துக் கொண்டு அதிகளவிலான சிவில் சமூகத்தினரையும் இணைத்துக் கொண்டு அதாவது தமிழ் மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிக்கக் கூடியவர்களையும் உள்வாங்கி அவர்களினூடாக இது சாத்தியமான விடயமா? இதைச் செய்வதற்கு எல்லோரும் ஆதரவு தருவார்களா? போன்ற பல விடயங்களைப் பேசயிருக்கின்றோம்.

இந்த முயற்சியின் ஆரம்பகட்டமாக ஒரு சில விடயங்களை நாங்கள் இன்று (நேற்று) பேசியிருக்கின்றோம். குறிப்பாக நாங்கள் யாரோ ஒருவரைத் தேர்ந்தெடுக்கக் கூறியபோது அவருக்கு வாக்களிக்கும் எண்ணத்தில் மக்கள் இருக்கின்றார்களா என்றொரு கேள்வி பல்கலைக் கழக மாணவர்களுக்கு எழுந்தது.

அதற்கு நாங்கள அப்படி யாரையும் தெரிவு செய்யவில்லை. முதலில் பொதுக் குழுவைக் கூட்டி பொதுக் குழுவில் இருந்து ஒருவரை நாங்கள் தேர்ந்தெடுப்போம் என்று கூறியபோது அவர்களின் சந்தேகத்தை நிவர்த்தி செய்வதாக அமைந்திருந்தது.

ஆக இவ்வாறான சில சில கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் நாங்கள் பதில்கள் வழங்கிக் கொண்டிருந்தோம். இது சம்பந்தமாக அவர்கள் எல்லோருக்கும் ஒரு குறிப்பு அனுப்பப்பட்டிருக்கின்றது.

இதுதான் இன்று (நேற்று) நடந்தது. அதாவது பூர்வாங்க ஆராய்வுதான். அந்த ஆராய்வின் அடிப்படையில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற திடமான ஒரு கருத்து எல்லோரிடமும் காணப்பட்டது. இனி அது எந்தளவுக்கு வலுவுறும் என்பது அடுத்த கூட்டத்தில் தான் தெரிய வரும்.

ஆனால், எங்களுடைய பொது வேட்பாளராக ஒருவரை நிறுத்துவதன் காரணத்தால் என்னென்ன நன்மைகளை நாங்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை ஆராய்ந்து அறிந்தோம்.

அதாவது பொது வேட்பாளர் வந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொண்டு வருவார். தமிழ் மக்களின் ஐக்கியத்தை நிலைநிறுத்துவார். சிங்கள மக்களுடன் பேசி தமிழ் மக்களுக்கு எதிராக இருக்கக்கூடிய மயக்கங்களைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும். வெளிநாட்டு அரசுகளுக்கு எங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக்கூறக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு பலவிதமான விடயங்களை ஒரு பொது வேட்பாளரூடாக நாங்கள் செய்யக் கூடியதாக இருக்கும். அதற்குத் தக்க ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இன்று (நேற்று) ஒரு கூட்டத்தை நடத்தியுள்ளோம். இதனைத் தொடர்ந்து அடுத்த ஒரு கூட்டத்தையும் வெகுவிரைவிலே நடத்தவிருக்கின்றோம்.

மேலும் இதில் யாரை நிறுத்துவது என்பது தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. அவ்வாறான பேச்சுக்களை நாங்கள் இப்போது பேச விரும்பவும் இல்லை. அது நாங்கள் செய்யக் கூடிய ஒன்றல்ல. அதாவது சகலரையும் இணைத்துக் கொண்டு பொதுக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தப் பொதுக் குழுவைக் கூட்டி அவர்களுக்கூடாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பதுதான் சரியான முறையென்று நாங்கள் கருதுகின்றோம்.

தெற்கிலிருந்து தமிழ் மக்களைத் தற்போது பலரும் நாடி வருகின்றார்கள். அவ்வாறு நாடி வருவது மட்டுமல்ல தமிழ் மக்களின் வாக்குகளை எவ்வாறு பெற்றுத் தருவீர்கள் என்று ஆங்காங்கே எங்களிடத்தே கேட்கின்ற நிலையில் இவர்களைப் பற்றி எங்களுக்குத் தெரியும்.

அதாவது இதுவரை காலமும் அதைப் பெற்றுத் தருவோம், இதைச் செய்து தருவோம் என்று கூறிவிட்டு எதுவுமே தரவில்லை. அவ்வாறு எதனையும் அவர்கள் தரவும் மாட்டார்கள். இவ்வாறான நிலைமையில்தான் நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று யோசித்த போது நீங்கள் எதனை எங்களுக்குத் தரப் போகின்றீர்கள் என்றால் அதனை எழுத்திலே தர வேண்டும். அவ்வாறு எழுத்திலே நீங்கள் தருவதை இராஜதந்திர மட்டத்திலே அதாவது ஒன்று அல்லது இரண்டு நாடுகளின் மத்தியிலே எழுத்தில் தந்தால்தான் நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ளலாம். அதற்காக எங்களுடைய பொது வேட்பாளரை நாங்கள் போட்டியிலிருந்து வெளியேற்ற மாட்டோம். மாறாக விருப்பு வாக்கை அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தலாம். ஆகவே, ஒவ்வொருத்தரும் இது சம்பந்தமாக என்ன சொல்ல இருக்கின்றார்கள், என்ன தர இருக்கின்றார்கள், எப்படி அதனைச் செய்யப் போகின்றார்கள் என்பதைப் பார்த்து அதனை எழுத்தில் வாங்கி அடுத்த கட்டத்துக்கு நாங்கள் செல்லவிருக்கின்றோம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பண்டிகை தரும் படிப்பினை

இன்று சித்திரைப் புத்தாண்டு பிறக்கின்றது.

இலங்கைத் தீவில் இரு மதத்தினருக்கு மட்டுமல்ல, இரு இனத்தினருக்கும் உரிய ஒரு பண்டிகையாக சிறப்பித்துச் சொல்லப்படும் வகையில் சித்திரைப் புதுவருடம் அமைந்துள்ளது. இந்துத் தமிழ் மக்களும், பௌத்த சிங்கள மக்களும் பொதுப்பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள்.

வேறுபட்ட மதங்களையும், மொழிகளையும், பண்பாடுகளையும் கொண்டுள்ள மக்கள் இணைந்து பண்டிகையொன்றை பெருவிழாவாகக் கொண்டாடுவது உலகில் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வகையில், இரு மதம் - இரு மொழி சார்ந்த வகையில் சித்திரைப் புதுவருடம் இருப்பதால் இலங்கையில் இது ஒரு தேசியப் பொருவிழாவாக முக்கியத்துவம் பெறுகின்றது.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அவர்களின் பண்டிகைகளும் இயற்கை நியதிப்படி - காலச் சக்கர ஓட்டத்தின்படி - அமைந்தவைதான்.

ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப்பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றிவர 365 நாள்கள், 6 மணி, 11 நிமிடம், 48 நொடிகள் ஆகின்றது. இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும்.

சூரியன் மேச இராசியில் பிரவேசிக்கும் போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது. ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது. ஆங்கில கிரெகோரிய நாள்காட்டியில் பெரும்பாலும் ஏப்ரல் 14 தொடங்கும் தமிழ் ஆண்டு சில ஆண்டுகளில் ஏப்ரல் 13 (இம்முறை நடப்பது போல) அல்லது ஏப்ரல் 15 ஆம் திகதியில் தொடங்கும். இதற்குக் காரணம் ஆங்கில (கிரகோரியன்) நாள்காட்டி ஒரே சீரானதாக இல்லை என்பதே.

இலங்கையில் தமிழரும் சிங்களவரும் சித்திரை ஒன்றையே புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள்.

புத்தாண்டு பிறக்கும் தருணத்தில் மருத்து நீர் வைத்து தோய்ந்து புத்தாடை அணிந்து பெரியவர்களிடம் ஆசீர்வாதம் பெற்று மகிழ்வான தருணத்தை கொண்டிருத்தல் என்பது தமிழர் பண்பாட்டில் குடும்பங்களுக்கு இடையில் காணப்படுகின்றது. இங்கு மருத்துநீர் வைத்து தலைக்கு நீர் ஊற்றல் என்பது எம்மை சுத்தப்படுத்தும் ஓர் முறையாக முன்னோர்களின் தழுவலை பின்பற்றி வரும் செயன்முறையாகும்.

புதுவருடம் பிறந்ததும் சுபநேரத்தில் தலைக்கு எண்ணெய் வைத்து ஆசி பெறுவது பௌத்த மக்களது பாரம்பரிய வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வருவதுடன் அதுவே அவர்களது புதுவருடத்தில் ஆரம்பக் கருமமாகவும் இருக்கிறது.

மகிழ்வான இத்தருணம் இனிமையானதாக அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சுவையான சிற்றுண்டிகள் போன்ற சைவ உணவுவகைகளை தயாரிப்பது தமிழ் பண்பாடாகும். குறிப்பாக இறைவனுக்கு படைப்பதற்காக எல்லோர் வீட்டிலும் பொங்கல் மேற்கொள்ளப்படும்.

புத்தாண்டு என்பது தனி ஒரு குடும்பமாகவோ, நபராகவோ கொண்டாடப்படுவது என்பது சிறந்த காரியம் அல்ல. அயலவர்கள், உறவினர்கள் என அனைவரது வருகையால் தழைத்தோங்கும் தருணம் அது. எனவே எல்லோர் குடும்பமும் அவர்களது பூரிப்பை பகிர்தல், அறுசுவை மிக்க பலகார உணவு வகைகளை தயாரித்தல் என்பது வழக்கம். பகிர்ந்துண்ணல் என்பது எல்லோர் மனங்களின் பண்பாகும்.

பகிர்ந்துண்டு மகிழும் பாரம்பரியம் இந்த இலங்கைத் தீவில் வாழும் இரண்டு பெரிய இனத்தவர்களான தமிழர்களினதும் சிங்களவர்களினதும் ஒற்றுமைப்பட்ட பண்டிகை தினத்தின் மையக் கருத்தாகவும் இழையாகவும் மிளிர்ந்து நிற்கின்றமை சிறப்பே.

இரு இனத்தவர்களினதும் புத்தாண்டு கொண்டாட்டத்தின் அடிப்படையாக இருப்பது மகிழ்வை பகிர்ந்தளித்துத் திருப்தி கொள்வதாகும்.

பண்டிகையில் அதைச் செய்ய முன்வந்தவர்கள், வாழ்வியலில் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து மகிழ இணங்காமல் இருக்கின்றமைதான் இந்த நாட்டின் கடந்த முக்கால் நூற்றாண்டு கால துன்பியல் சரித்திரமாக நீடிக்கிறது.

பண்டிகை கற்றுத்தந்த அந்த பண்பியல்பை வாழ்வியலில் - ஆட்சியியலில் - நிர்வாக முறைமையில் - நாம் பின்பற்றுவோமேயானால் இலங்கைத் தீவின் உயர்வு விஞ்சி நிற்கும் என்பது திண்ணம்.

# பா.ஜ.கவை உள்ளே விட்டால் அமைதி இல்லாமல் போய்விடும்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு




“கோவை மக்கள் அமைதியை விரும்பக் கூடியவர்கள். அமைதியான இடத்தில்தான் தொழில் வளரும், தொழில் வளர்ச்சி இருக்கும், நிறுவனங்களை நடத்த முடியும். பா.ஜ.க. போன்ற கலவரக் கட்சிகளை உள்ளே விட்டால், அமைதி போய்விடும். தொழில் வளர்ச்சி போய்விடும். நிறுவனங்களை நிம்மதியாக நடத்த முடியாது.”

– இவ்வாறு கோவையில் இடம்பெற்ற பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று கோவை மாவட்டம், சிட்டிபாளையத்தில் நடைபெற்ற இண்டியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“மாநாடு போல நடந்துகொண்டிருக்கும் இந்தக் கோவை கூட்டத்துக்கு மகுடம் வைத்ததைப் போல், இந்தியாவின் இளந் தலைவர் சகோதரர் ராகுல் காந்தி வருகை தந்திருக்கிறார். நாடு சந்திக்க இருக்கும், இரண்டாம் விடுதலை போராட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் கைகளை வலுப்படுத்த, தி.மு.க. தோளோடு தோள் நிற்கிறது.

தி.மு.க. எப்போதும், சோதனைக் காலத்தில் காங்கிரஸ் கட்சியோடு இருக்கும் கூட்டணிக் கட்சி. எப்போதும் வெல்லும் கூட்டணி, நம்முடைய கூட்டணி. சோனியா காந்தி மீதும் சகோதரர் ராகுல்காந்தி மீதும் தமிழக மக்கள் என்றும் தணியாத அன்பும் பாசமும் கொண்டவர்கள். அப்படிப்பட்ட ராகுலை, நம்முடைய ஸ்டைலில் வரவேற்க வேண்டும் என்றால் ராகுல் அவர்களே வருக... புதிய இந்தியாவுக்கு விடியல் தருக என இந்தியாவின் தென்முனையான தமிழகத்தில் இருந்து வரவேற்கிறேன்.

தமிழகத்தைச் சேர்ந்த ஒரு மிகப்பெரிய தொழில் நிறுவனம், 6500 கோடி ரூபாய் முதலீட்டில் கோவையைச் சேர்ந்த பல்லாயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் முதலீட்டை மேற்கொள்வதாக முடிவானது. தமிழக அரசும் இதற்கான எல்லா பேச்சுவார்த்தைகளும் முடிந்த பிறகு, அவர்களை மிரட்டி அந்தத் தொழில் திட்டத்தை குஜராத்துக்கு மாற்றிவிட்டார்கள். இதுதான் கோவைக்கான பா.ஜ.கவின் போலிப் பாசம். எதிர்காலத்தில், மிகப் பெரிய வாய்ப்புகளைத் தரும், செமிகண்டக்டர் தொழில் திட்டத்தை குஜராத் மாநிலத்துக்கு மிரட்டி மடைமாற்றியது பா.ஜ.க. தான்.

எப்படி கூச்சமே இல்லாமல் ஓட்டு கேட்டு வருகிறீர்கள்? கோவையில் இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது உங்களுக்கு பிடிக்கலையா? கோவை மக்கள் மேல் ஏன் உங்களுக்கு இவ்வளவு வன்மம்? கோவை மக்கள் அமைதியை விரும்பக் கூடிய மக்கள். அமைதியான இடத்தில்தான் தொழில் வளரும், தொழில் வளர்ச்சி இருக்கும், நிறுவனங்களை நடத்த முடியும். பா.ஜ.க. போன்ற கலவரக் கட்சிகளை உள்ளே விட்டால், அமைதி போய்விடும். தொழில் வளர்ச்சி போய்விடும். நிறுவனங்களை நிம்மதியாக நடத்த முடியாது.”– என்றார்.

# தி.மு.க, அ.தி.மு.க. ஊழல்களால் தமிழகம் வளர்ச்சி பெறவில்லை

அமித் ஷா பிரச்சாரம்




“தி.மு.க, அ.தி.மு.க. ஆகிய கட்சிகளின் ஊழல்களால் தமிழகம் வளர்ச்சி பெறவில்லை.”

– இவ்வாறு மதுரையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றம் சாட்டினார்.

மதுரை மக்களவைத் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் ராம. சீனிவாசனுக்கு ஆதரவாக மதுரையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று வீதி பிரச்சாரம் ஊர்வல மூலம் ஆதரவு திரட்டினார்.

இதன்போது அமித் ஷா உரையாற்றுகையில்,

“தமிழகத்தில் இந்தமுறை அ.தி.மு.க, தி.மு.க. இரு கூட்டணியையும் 40 தொகுதிகளிலும் கைவிட வேண்டும். அ.தி.மு.க, தி.மு.க. இவர்களிடையே நிலவும் ஊழலால் தமிழகம் பெற வேண்டிய வளர்ச்சிகளை பெறவில்லை. மோடி தேசத்தின் வளர்ச்சி, பாதுகாப்பில் அக்கறை கொண்டுள்ளார். தற்போது சரியான சமயம் வந்துவிட்டது. மோடிக்கு வாக்களிக்க தயாராகி விட்டீர்கள்.

பா.ஜ.க. மட்டுமே தமிழ் மற்றும் தமிழக வளர்ச்சியில் அக்கறை செலுத்துகிறது. தமிழத்தின் பெருமையை இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பறைசாற்றி வருபவர் பிரதமர் மோடி மட்டுமே. என்னால் தமிழில் பேச முடியவில்லையே என்பதற்காக மன்னிட்டு கேட்டுக்கொள்கிறேன். அடுத்த தேர்தலில் தமிழில் பேச கற்றுக் கொள்வேன். தாமரை சின்னத்துக்கு வாக்களித்து மதுரை வேட்பாளர் பேராசிரியர் ராம.ஸ்ரீனிவாசனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.” – என்றார்.

# மேற்கு ஆப்பிரிக்க நாடான சியரா லியோனில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளது



மேற்கு ஆப்பிரிக்க நாடான சியரா லியோனில் போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

அந்த நாட்டிலுள்ள பெரும்பாலான மக்கள் குஷ் ரக போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என குறிப் பிடப்படுகின்றது.

இந்த குஷ் போதைப்பொருள் மனித எலும்புகளிலிருந்து உருவாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளாக இந்த குஷ் ரக போதைப் பொருள் சியரா லியோன் பகுதியில் புழக்கத்திலிருந்து வருகிறது.

இதன்படி குறித்த போதைப்பொருளின் பாவனை அப் பகுதி மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அதனைத் தயாரிப்பவர்கள் புதைகுழிகளைத் தோண்டி பிணங்களை சேகரித்து அதன் எலும்புகளிலிருந்து குஷ் போதைப்பொருளைத் தயார் செய்துவருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

சியரா லியோனில் இதுவரை நூற்றுக்கணக்கான புதை குழிகளை இந்த கும்பல் தோண்டியுள்ளது என அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், குஷ் ரக போதைப்பொருள் மூலம் நாட்டில் குடியிருப்பதற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள தாக அந்த நாட்டின் ஜனாதிபதி கவலை வெளியிட்டுள் ளார்.

மேலும், அந்த போதைப்பொருளை உட்கொள்வதன் மூலம் உயிரிழப்புகள் அதிகரிப்பதற்கான வாய்ப்பு காணப்ப டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிடியிலிருந்து மக்களை மீட்க ஒவ்வொரு மாவட் டத்திலும் போதைப்பொருள் ஒழிப்பு மையங்கள் அமைக் கப்படும் எனவும் போதைப்பொருள் விற்பனையாளர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த நாட்டு ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

# இஸ்ரேலிலுள்ள தமது நாட்டு பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்தது அமெரிக்கா




ஈரான், இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல்களை மேற்கொள் ளலாம் என்ற அச்சம் உருவாகியுள்ள நிலையில், அங்கு வாழும் அமெரிக்கர்கள் தங்களது பயண நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக ஜெரூசலம், டெல் அவிவ் மற்றும் பீர்ஷெபா பகுதிகளுக்கு வெளியே பயணிக்க வேண்டாம் என அமெ ரிக்கா தங்களது நாட்டு பிரஜைகளைக் கோரியுள்ளது.

11 நாள்களுக்கு முன்னர் சிரியாவில் உள்ள தங்களது தூதரகத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 13 பேர் பலியானமைக்கு பதில் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் சிரியா மற்றும் லெபனானில் உள்ள ஈரானின் உயர்மட்ட விசேட படையணியின் சிரேஷ்ட தளபதிகளும் இராணுவ உத்தியோகத்தர்களும் அடங்குகின் றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூதரக தாக்குதலுக்கு இஸ்ரேல் உரிமை கோராத நிலை யில், தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேலே இருந்ததாக பரவலாக கருதப்படுகின்றது.

காசாவில், இஸ்ரேலுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடும் பாலஸ்தீனிய குழுவான ஹமாஸை ஈரான் ஆதரிக்கின்றது.

அத்துடன், இஸ்ரேலுக்கு எதிரான செயற்பாடுகளில் அடிக் கடி ஈடுபட்டு வரும் ஹிஸ்புல்லா போன்ற சிறிய குழுக்களுக் கும் ஈரான் தமது ஆதரவினை வழங்கி வருகின்றது.

காசாவிற்கு எதிரான யுத்தம் பிராந்தியம் முழுவதும் பரவுவதைத் தடுப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகள் முனைப்புடன் தொடரும் நிலையில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், பிரித்தானியாவின் வெளியுறவுச் செயலா ளர் லோட் கெமரூன், ஈரானிய வெளியுறவு அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு யுத்த நிலைமை தீவிர மடைவதைக் கட்டுப்படுத்துமாறு கோரியுள்ளார்.

முன்னதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஈரானுக்கு எதிராக குறிப்பிடத்தக்க வகையில் தாக்குதலை மேற் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என எச்சரித்துள்ளது டன், அமெரிக்கா தொடர்ந்தும் இஸ்ரேலுக்கு இரும்புக் கவச பாதுகாப்பினை வழங்கும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கருத்து தெரிவிக்கையில், எந்தவித பாதுகாப்புச் சவாலையும் எதிர்கொள்ள தமது அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் தங்களுக்கு எதிராக செயற்படும் எந்த நாட்டிற்கும் எதிராகவே தங்களது இராணுவம் செயற்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

# மணல் அகழ்வு தொடர்பாக மன்னாரில் விசேட ஒழுங்கு

## அரச அதிபர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

(ந.லோகதயாளன்)

மண் அகழ்வுக்கு அனுமதி பத்திரங்கள் அனைத்தும் அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினால் மேற் பார்வை செய்யப்பட்டதன் பின்பே மண் அகழ்வு செய்ய அனுமதி வழங்கப்பட வேண்டும் என மன்னாரில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இடம் பெறும் மணல் அகழ்வு சம்பந்தமான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன் கிழமை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனக சபாபதி கனகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், சுற்றுச்சூழல் தொடர்பான அமைப்புகளின் பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் மற்றும் பிரஜைகள் குழுவின் தலைவர், கடற்படையினர், பொலிஸார் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற சட்டபூர்வமான மற்றும் சட்ட விரோதமான மணல் அகழ்வு சம்பந்தமாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் இருக்கும் மணல் அகழ்வு அனுமதி பத்திரங்கள் சிலவற்றை தற்காலிகமாக இடை நிறுத்துவது என்றும், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் மணல் அகழ்வு செய்யப்படுகின்ற இடங்களை கள விஜயம் மேற்கொண்டதன் பின்னர் அனுமதி வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு மாவட்டத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான மண்அகழ்வு இடம்பெற்று வருவதாகவும், இச் சட்டவிரோத மண் அகழ்வு மக்களுக்கு பாரிய இடையூறாக இருப்பதாகவும் பொது மக்களின் குற்றசாட்டுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதே நேரம் வெளி மாவட்டங்களில் இருந்து தனி நபர்களால் மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவதாகவும், இதனைத் தடுப்பதற்காக சில திணைக்களங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதாகவும், அத்தோடு அவர்களுக்கான அனுமதி பத்திரங்களை உடனடியாக ரத்து செய்வதாகவும் மாவட்ட அரசாங்க அதிபரினால் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு வேறு திணைக்களங்களால் வழங்கப்படுகின்ற அனுமதிப் பத்திரங்கள் அனைத்தும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் குழுவினால் மேற்பார்வை செய்யப்பட்டதன் பின்னரே அவ்விடங்களில் அனுமதி வழங்க முடியும் எனவும் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மண்அகழ்வு போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை வேறு மாவட்டத்தில் இருந்து வழங்கும் போது ஏ32 பாதையில் அனுமத்திரம் வழங்க முடியாது எனவும் இவ்வாறு வழங்குவதால் சட்டவிரோத மணல் அகழ்வு அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டவிரோத மண் அகழ்வை தடுப்பதற்கு பொலிஸார் மற்றும் புவிச்சரிதவியல் திணைக்களமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.




# கொழும்பு - மும்பை இடையே புதிய நேரடி விமான சேவை

இந்தியாவின் இண்டிகோ எயார்லைன்ஸ் (IndiGo Airlines) கொழும்பு மற்றும் மும்பை இடையே நேரடி விமான சேவையை ஆரம்பித்துள்ளது.

வாரத்திற்கு மூன்று தடவைகள் இந்த விமான சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போது சென்னை, பெங்களூர் மற்றும் ஹைதராபாத்திலிருந்து கொழும்பிற்கு IndiGo Airlines மூலம் நேரடி விமானங்கள் இயக்கப்படுகின்றன.

விமானங்களின் எண்ணிக்கை மற்றும் பயணிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், IndiGo Airlines இந்தியாவின் மிகப்பெரிய விமான நிறுவனமாக கருதப்படுகிறது.





# சகோதரரின் நினைவிடத்தில் டக்ளஸ் நேற்று உணர்வஞ்சலி

சாவகச்சேரி கல்வயல் பகுதிக்கு நேற்றையதினம் விஜயம் சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது சகோதரரான பிறேமானந்தா 1987 ஆம் ஆண்டு புலிகளால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் எனக் கூறப்படும் நினைவிடத்தில் சில நிமிடங்கள் மனம் ததும்ப தனது உணர்வஞ்சலிகளை செலுத்தினார்.

முன்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரரான பிறேமானந்தா 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்களால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார் என்று அமைச்சர் தரப்பில் குற்றம் சுமத்தப்படுகின்றது.

அந்தப் பகுதிக்கு நேற்றுச் சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது சகோதரனின் நினைவிடத்தில் சில நிமிடங்கள் மனம் ததும்ப தனது உணர்வஞ்சலிகளை செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## மீண்டும் கொரோனாத் தொற்று குருநாகலில் 2 பெண்கள் சாவு




குருநாகல் போதனா வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான இருவர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் நீண்ட நாள்களின் பின்னர் இந்த இரண்டு மரணங்களும் நேற்று பதிவாகி உள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பெண் நோயாளிகள் இருவர் உயிரிழந்தமையை அடுத்து சந்தேகத்தின் பேரில் நடத்தப்பட்ட பி.ஸி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நோயாளி சிகிச்சை பெற்ற விடுதித் தொகுதியில் உள்ள நோயாளிகள் மற்றும் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுநோய் நிலைமை அண்மைக் காலத்தில் புறக்கணிக்கப்பட்டு வந்தது. மீண்டும் அது குறித்துக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அதிவேக வீதி வருமானம் 25 வீதமாக அதிகரிப்பு!



அதிவேக வீதிகளில் வருமானம் 25 வீதம் அதிகரித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் அதிவேக வீதிகளில் 1,28,000 வாகனங்கள் பயணித்துள்ளன என அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் நேற்று 46 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது வழமையான நாளொன்றின் வருமானத்துடன் ஒப்பிடுகையில், 25 வீதம் அதிகரிப்பு எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் இரண்டு நாள்களில் அதிவேக வீதிகளின் வருமானம் 60 வீதமாக அதிகரிக்குமென வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

# அரசியலுரிமை விடயத்தில் எம்மை நம்புங்கள் உறுதிமொழி தருகிறோம் என்கிறது ஈ.பி.டி.பி.!

அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத்தர எம்மால் முடியும். அதேவேளை இருக்கின்ற அதிகாரங்களை செயற்படுத்தி மேலும் அதிகாரங்களை பெற்று அவற்றை நடைமுறைப்படுத்த முடியும் என்பதிலும் நாம் தெளிவாகவே இருக்கின்றோம் எனத் தெரிவித்த ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன், அதனால்தான் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கையில் மக்களாகிய நீங்கள் எங்கள் பின்னால் அணி திரளுங்கள், நாங்கள் உறுதிமொழி தருகின்றோம் என எமது கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிவருகின்றார் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வரவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்குமாறு கூறி வருகின்றார். ஜனாதிபதியாக மீண்டும் ரணில் விக்கிரமசிங்க வருவதற்கு தமிழ் மக்கள் ஆணை வழங்கினால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டமைக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியிருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

கடந்த காலத்தில், அதாவது இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னர் வடமராட்சியில் "ஒபரேஷன் லிபரேசன்" என்னும் இராணுவ நடவடிக்கை நடந்தபோது தமிழகத்தில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தார். அதே போன்று மத்தியில் ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தார்.

அன்று வடமராட்சி பிரதேசத்தை முழுமையாக இராணுவம் கைப்பற்றியதன் பின்னர் தொடர்ச்சியாக இராணுவம் ஏனைய இடங்களையும் கைப்பற்ற முனைந்தது. இதனால் எமது அரசியல் உரிமை அடியோடு அற்றுப்போகும் என்ற நிலைப்பாடு உருவானது.

இந்நிலையில் வடமராட்சி பிரதேச மக்களுக்கான உணவுப் பொருள்களை இந்திய கடற்படை கப்பல்கள் கொண்டு வந்தன.இலங்கை கடற்படை அவற்றைத் திருப்பி அனுப்பியது.

ஆனால் இந்திய அரசு ஒதுங்கியிருக்கவில்லை. இந்தியாவின் மிராஜ் விமானங்கள் தாம்பரம், மீனம்பாக்கம் போன்ற பகுதியில் இருந்து புறப்பட்டு இலங்கையின் வடக்கே வடமராட்சி பிரதேசத்தில் மட்டுமல்லாது குடாநாடெங்கும் உணவுப் பொட்டலங்களை வீசியமையுடன் இலங்கை அரசுக்கும் ஒரு




வலுவான செய்தியைச் சொல்லிச்சென்றது.

அதாவது தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டால் இந்தியா பார்த்துக் கொண்டிருக்கமாட்டது என்ற வலுவான செய்தியை தெனிலங்கை இனவாத அரசுக்கு சொல்லிச் சென்றது.அதன் பின்னர்தான் இலங்கை – இந்திய ஒப்பந்தம் உருவானது.

இவை அனைத்தும் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் தான் நடந்தேறின. அதன் வலராற்று அனுபவங்களை கொண்டே நாம் சொல்கின்றோம். தற்போதைய ஜனாதிபதி ரணில் மீண்டும் அதிகாரத்திற்கு வந்தால் எம்மால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுத்தர முடியும் – அவர் அதை முன்னெடுப்பார் என்று.

அதாவது எமது மக்களிடம் எமது கட்சியின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி சொல்வார், "நீங்கள் ரணிலை நம்பவோ அல்லது நம்ப முடியாதென்ற நிலைப்பாட்டிலோ சிந்திக்க வேண்டியதில்லை. என்னை நம்புங்கள். என்னிடம் உங்கள் அரசியல் அதிகாரத்தை தாருங்கள். நான் மக்களது அடிப்படை பிரச்சினைகள் மட்டுமல்லாது அரசியல் உரிமை பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வை பெற்றுத்தருவேன்" – என்று.

அமைச்சரது இந்த உறுதியான நம்பிக்கைக்கு மக்கள் செவிசாய்த்தால் நிச்சயம் அனைத்துப் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளும் கிடைத்தே தீரும். – என்றார்.

# மட்டு. கல்லாறு பாலத்தில் குடைசாய்ந்த கோழி லொறி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் விற்பனைக்காகக் கோழிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த டிப்பர் ரக லொறி ஒன்று கல்லாறு பாலத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் லொறிக்குப் பலத்த சேதமேற்பட்டுள்ளது. கோழிகளும் வீதிகளில் சிதறிக் காணப்பட்டன.

சாரதியால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனமையே இந்த விபத்துக்குக் காரணம் என சொல்லப்படுகிறது. விபத்து தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிகுடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத் தெரிவுக்காக நேற்றைய ஒலிமடுக் கூட்டத்தில் நடந்தது என்ன?

## சிவசேனைப் பிரமுகர் மறவன்புலவு க சச்சிதானந்தன் விளக்கம்



"வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத் தெரிவுக் கூட்டத்துக்குள் அழையா விருந்தாளியாக நுழைந்த சிவசேனை் எதிர்ப்புத் தெரிவித்து வெளியேறினார்கள் மக்கள் என்ற தலைப்பில் நேற்று "மாலை முரசு" இதழில் வெளியான செய்தி தொடர்பில் சிவசேனைப் பிரமுகர் மறவன்புலவு க சச்சிதானந்தன் தமது பக்கத் தகவல்களை நேற்று மாலையே அனுப்பியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

வெடுக்குநாறி அருகே ஒலிமடுவில் இன்று நடந்த நிகழ்ச்சிகளை நான் புரிந்தவாறு மறவன்புலவு க சச்சிதானந்தன் (சிவசேனை) எழுதுகிறேன்.

கடந்த வாரம் நான் இந்தியாவிலிருந்து திரும்பியவுடன் வெடுக்குநாறி அருள்மிகு ஆதி சிவன் கோயில் பூசகர் மதிமுகராசா என்னைத் தொலைப்பேசியில் அழைத்தார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் வெடுக்குநாறிச் சிவன் கோயில் சிக்கல்கள் தொடர்பாக ஆய்வதற்கான கூட்டத்தில், தேர்தல் நடத்தி புதிய அறங்காவல் குழு உறுப்பினர்களைத் தேரக் கோரியதாக அவர் என்னிடம் கூறினார்.

ஏப்ரல் 12 ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஒலி மடுவில் நடக்கும் கூட்டத்திற்கு வருமாறு மதிமுகராசா அழைத்தார்.

முன்பு போல் வர என்னிடம் வண்டி இல்லையே, என்னால் வர முடியாதே என்றேன்.

அரசியலார் தனி நன்மைக்காக, கட்சி ஆதாயங்களுக்காக, கோயிலைப் பார்க்கிறார்கள் என்று மதிமுகராசா என்னிடம் கூறினார். கோயிலை வழிபாட்டுக்காக மட்டுமான ஆட்சி அறங்காவல் குழுவை அமைக்க வேண்டும் என்றார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த அரசியலற்றவர்களை உள்ளடக்கிய ஒரு தீர்வைக் காண்க என அவரிடம் கூறினேன்.

அத்தோடு அவர் அழைப்பையும் மறந்துவிட்டேன்.

இன்று (அதாவது நேற்று) காலை 8:30 மணிக்கு புளியங்குளம் சேர்ந்த தம்பாபிள்ளை என்னைத் தொலைப்பேசியில் அழைத்தார், "தயவுசெய்து ஒலிமடுவில் நடக்கும் கூட்டத்திற்கு வாருங்கள். அரசியலாரும் கிறித்தவரும் தங்களைப் புதிய குழுவிற்குள் தேர்ந்தெடுக்க முயல்கிறார்கள். உள்ளூர் மக்கள் அவர்களிடமிருந்து எச்சரிக்கையாக இருக்கிறார்கள்" என்று என்னிடம் கூறினார்.

என் இயலாமையை அவரிடம் சொன்னேன். என்னை ஒலிமடுவிற்கு ஓட்டிச் செல்ல அவர் தனது நண்பரைக் கண்டுபிடித்தார்.

கூட்டம் நடக்கும் இடத்தை நான் அடைந்தபோது, அது நடந்து கொண்டிருந்தது. புதிய குழுவைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள நன்மை, தீமைகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

பூசகர் மதிமுகராசா, வேலன் சுவாமி, தமிழ்ச் செல்வன் (குழுச் செயலாளர்) ஆகியோருடன் மேடை வரிசையில் என்னை இருத்தினர்.

எனக்கு முன்னால் அரங்கில் சுமார் 25 பேர்களைப் பார்த்தேன், அவர்களுள் 6 அல்லது 7 பெண்கள்.

முதல் வரிசையில் பீட்டர் இளஞ்செழியன், இரவிகரன், தவபாலன் ஆகியோரும் இருந்தனர்.

சற்று நேரத்தில், தவபாலன் என்னைப் புத்த சார்பாளர் எனக் குற்றம் சாட்டத் தொடங்கினார், அதனால் எனக்கு கூட்டத்தில் இடமில்லை என்றார்.

அடுத்து ஒருவர் பேசினார். புத்தர்கள் எங்களை ஆக்கிரமிப்பாளர் என்றார். கிறித்தவர்கள் நம்மோடு இருப்பவர்கள். புதிய குழுவில் கிறித்தவர்களையும் சேர்ப்பது நல்லது. குழு உறுப்பினர் அனைவரும் வெடுக்குநாறியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்றார்.

இந்துக் கோவில்களில் பரங்கிக்கு இடமில்லையே என்றார் செயமாறன். இந்தக் கூட்டத்தில் பரங்கியர் கலந்து கொள்ள முடியாதே என்றார்.

திருக்கேதீச்சரத்தில் வளைவை உடைத்தவர்கள் கத்தோலிக்கரே என்றார் தம்பா பிள்ளை.

பீட்டர் இளஞ்செழியன் கூட்டத்திலிருந்து எழுந்து வெளியேறினார்.

தொடர்ந்து இரவிகரனும் தவபாலனும் அரங்க முன் நடையில் அவருடன் இணைந்தனர்.

மூவரும் சற்று நேரத்தில் திரும்பினர். முன்வரிசையில் இருந்த அவரவர் நாற்காலிகளில் அமர்ந்தனர்.

தவபாலன் என்னைச் சுட்டிக்காட்டி, "உங்களை எவரும் அழைக்கவில்லை. ஏன் வந்தீர்கள். உங்கள் வேட்டியை புத்த மதகுருவிடம் கொடுத்தவரல்லவா? உங்களுக்கு வெட்கமில்லையா? புத்தர்கள் எங்கள் ஆக்கிரமிப்பாளர்களாச்சே? நீங்கள் புத்த ஆதரவாளர், நீங்கள் அரசு சார்பாளர்! நீங்கள் கூட்டத்தில் பங்கேற்க முடியாது, வெளியே செல்லுங்கள்" என்றார்.

என் பக்கத்தில் அமர்ந்திருந்த பூசகரிடம், "நீங்கள் என்னை அழைத்தீர்கள், நான் இங்கே இருக்கிறேன்" என்றேன்.

இதைப் பூசகர் தவபாலனிடம் ஒப்பினார்.

மூவரும் முதலில் வெளியேறினர். வேலன் சுவாமி தொடர்ந்தார். அடுத்தடுத்துப் பங்கேற்பாளர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறத் தொடங்கினர்.

எனது பழைய நண்பர் திரு பூலோகசிங்கம், அவரது மனைவியுடன் சேர்ந்து, வெடுக்குநாறியை எவ்வாறு பூசை மற்றும் வழிபாட்டிற்குரியதாக்கலாம் என்பது குறித்து அரசாங்கத்தின் உள்ள பலருக்கு அவர் எழுதிய சில ஆவணங்களை எனக்குக் காட்டினார்.

கூட்ட அறையில் இருந்த நாற்காலிகளையும் அகற்றினர். நான் அமர்ந்திருந்த நாற்காலியை என்னிடம் கேட்டார்கள். மேசையில் உட்கார்ந்தேன். நெடும் பயணம். காலை உணவு உண்ணவில்லை. சோர்வடைந்தேன். எனவே மேசையிலேயே படுத்தேன்.

பெரும்பாலான பங்கேற்பாளர்கள் பூசகரின் வீட்டில் நண்பகல் உணவிற்குச் சென்றனர். நான் அரங்கை விட்டு வெளியேறினேன். என் வீட்டிற்கு அழைத்துச் செல்லுமாறு நண்பரைக் கேட்டேன். - என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.


அனைவருக்கும்
இனிய சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துகள்
வெற்றிகரமாக
10 ஆவது
ஆண்டில்
காலடி எடுத்து வைக்கிறது ரூபின்ஸ் வைத்தியசாலை
வடமராட்சி மக்களின்
24hrs ஆரோக்கிய காவலன்
உங்கள் நலமே
எங்கள் நோக்கம்
Ruhbins Hospital
Ruhbins Hospital (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94 77 248 6642

# கோணேஸ்வரம் இடித்தழிக்கப்பட்டதன் 400 ஆண்டுகள் நினைவேந்தல் நாளை

ஈழத்தமிழர்களின் உயர்ந்த பண்டைய வழிபாட்டுத்தலமும் பாடல்பெற்ற புராதன சிவன் ஆலயமுமான திருக்கோணேஸ்வரம் அந்நியர்களால் இடித்தழிக்கப்பட்ட போது உயிர்த்தியாகம் செய்த தமிழ் பெருமக்களை நினைவேந்தும் வகையில் இறை வழிபாடுகள் திருகோணேஸ்வரத்தில் நடைபெறவுள்ளன.

கோணேஸ்வரம் இடித்தழிக்கப்பட்டு 400 ஆண்டுகளாகின்றன எனக் கூறப்படுகின்றது.

இந்த இறைவழிபாடுகள் திருக்கோணேஸ்வரத்தில் தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் திருமுன்னிலை வகிக்க நாளை ஞாயிறு காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.


கோணேசர் திருப்பதிகம் ஓதி வழிபாடுகளை நிறைவு செய்த பின் தொடர்ந்து இந்த 400 ஆவது நினைவேந்தல் ஆண்டு நிகழ்வுகளை எதிர்வரும் ஆண்டு முழுவதும் நாடாளாவிய ரீதியில் முன்னெடுத்தல் தொடர்பான வழி வரைபட கலந்துரையாடல், அடையாள ஆவண நூல்நிலைய அங்குரார்ப்பணம், அறநெறி மாணவருக்கு நூல்கள் வழங்கல், மாகேசுவர பூசை என்பன தென்கயிலை ஆதீனத்தில் அகத்தியர் அடிகளார் தலைமையில் இடம்பெறும்.






**உரலார் கேள்வி :- சிங்களப் பிரமுகர்களை நாடி நிற்பதால்தான் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தச் சம்பந்தன் உடன்படுகின்றார் இல்லை என்று, முன்னாள் முதலமைச்சர் தனது பேட்டியொன்றில் கூறி இருப்பதோடு, சம்பந்தனை இழிவு செய்யும் முகமாகப் பல விடயங்களைக் கூறியிருக்கின்றாரே கவனித்தீர்களா?**

**உலக்கையார் பதில் :-** இந்த மனிதர் அரசியலுக்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்தவர்களில் நானும் ஒருவன் என்ற விதத்தில், இவரது செயல்களைக் கண்டு 'உடுக்கை இழந்தவன்' போல் நாணப்படுகின்றேன். ஆரம்பத்தில் அரசியலுக்கு வரவேண்டும் எனக் கேட்கப்பட்ட



போது, அவர் பண்ணிய 'பிகு' வைப் பார்த்து உலகப்பற்றே இல்லாதவர் இவர் என நினைந்து ஏமாந்தவர்களில் நானும் ஒருவன்.

அவர் பதவியைப் பிடித்த ஓரிரு மாதங்களுக்குள்ளேயே இவர் யார்? என என்னால் இனம் காண முடிந்தது. அது பற்றி அப்போதே எழுதினேன். அதைப் பார்த்து, பலரும் என்னோடு கோபித்தார்கள். எனக்கும் அவருக்கும் ஏதோ தனிப்பட்ட பகை என்று கதை கட்டினார்கள். ஒரு விழாவில் என்னைக் கண்டு 'மாவை' ஐயா முகத்தைத் திருப்பிக்கொண்டு போனார். முதலமைச்சரது சுய சொரூபம் நாளாக நாளாகத்தான் அனைவருக்கும் தெரிய வந்தது.

அவர் செய்த 'கூத்துக்களை' எத்தனை முறை என்றுதான் பட்டியல் இடுவது? எனக்கே அது அலுத்துவிட்டது. அவரது செயல்கள் கண்டு முன்பு கோபித்தேன். இப்போது அருவருப்பு அடைகிறேன்.

ஒரு படித்த மனிதர், முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர், ஒரு பக்திமான் என்றெல்லாம் நம்பித்தான், இவரைத் தமிழச் சமூகம் மதித்தது. மேற் சொன்ன எந்த ஒரு தகுதிக்கும் இவர் உரியவர் அல்லர் என்பதை இப்போதுதான் நம்மவர்கள் இனம் கண்டு கொண்டுள்ளார்கள். தான் கொலையாளி ஒருவரின் சீடர் என்று அவர் சொன்ன போதே, நாங்கள் உசாராகி இருக்க வேண்டும். ஏமாந்து விட்டோம்!

மேற் சொன்னவை எனது மனக் குமுறல்கள். இனி உங்கள் கேள்விக்கு வருகின்றேன். கட்சிக்காரர்கள் பலரது எதிர்ப்புக்கு மத்தியில், வீடு தேடிச் சென்று, 'வாராது வந்த மாமணியை' அழைத்து வந்தாற்போல, 'வெற்றிலை வைத்து' அவரைச் சம்பந்தர் அழைத்து வந்தார். அக்காலத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு இவரைப் பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை. கூட்டமைப்பின் முகவரியால் வெற்றி பெற்று, முதலமைச்சராகிய பின்னர், கிளைக்குக் கிளை தாவியவர், இன்று தோற்றாலும் பாரவாயில்லை, ஜனாதிபதித் தேர்தல் எனும் கிளையில் ஒரு தரம் உட்கார்ந்து பார்க்கலாம் என நினைக்கும் அவரது பேராசையை நினைக்க வெட்கம் வெட்கமாய் வருகிறது.

இத்தனைக்கும், இவர் இவ்வளவு கூத்துக்கள் ஆடிய பிறகும், இன்றுவரை சம்பந்தர் இவரை இழிவுபடுத்தி ஒரு வார்த்தைதானும் பேசவில்லை. 'இவரை அரசியலுக்கு கொணர்ந்து தவறு இழைத்து விட்டேன்' என இன்று வரை தமிழ் மக்களிடம் அவர் மன்னிப்புக் கோரவுமில்லை.

அப்படி இருக்க இன்று இவர் சம்பந்தரைக் குற்றம் சாட்டியிருப்பது, நாகரீக மீறலின் உச்ச நிலை. தனது ஆசைக்காக, இவர் யாரையும் இழிவு செய்யத் தயங்கமாட்டார் என்பதை மீண்டும் ஒரு தரம் நிரூபித்திருக்கின்றார்.

இவரைப் பற்றித் தெரிந்த பிறகும், இவரைத் தமிழ்மக்கள் சார்பான பொது வேட்பாளராக நிறுத்த நினைக்கும், கட்சிகளின் அறிவை நினைத்து ஆச்சரியப்படவேண்டி இருக்கின்றது. கூட்டமைப்பைவிட்டு வெளியே வந்த பிறகு, கடலில் வீழ்ந்து தத்தளிப்பவன் எது கிடைத்தாலும் பிடிக்கத் தயங்க மாட்டான் என்ற நிலையில்தான் முன்னாள் ஆயுத, இன்னாள் சாத்வீகக் கட்சியினர்கள் இருக்கின்றார்கள் போல. தாடியும், விபூதியும், பொட்டும் இன்னும் தம்மைக் காக்கும் என நினைக்கும் இவர்தம் அறியாமையை என்னென்பது?

சம்பந்தரை அவர் இழிவு படுத்தவில்லை. தம்மைத்தான் இழிவு படுத்தி இருக்கின்றார். 'நிலத்தின் தன்மை கால் காட்டும். காட்டும் குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல்' என்று வள்ளுவர் சும்மா சொல்லவில்லை. அவரது பேச்சைப் பெரிது படுத்தாமல் விட்டுச் செல்லுங்கள்.

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

**சல்லடையாரின் சலிப்பு :- வாரிதியார் 'கரீக்டாய்ச்' சொல்லுகிறார். துஷ்ட ரைக் கண்டால் தூர விலகுங்கோ!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி:- என்ன? சுமந்திரனை எல்லோருமாகச் சேர்ந்து இனத் துரோகி யாய் ஆக்கி விடுவார்கள் போலிருக்கின்றதே, நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** விதியைக் குறிக்க தமிழில் 'ஊழ்' என்ற ஒரு சொல்லும் இருக்கின்றது. அதை வைத்து 'ஆகூழ்', 'போகூழ்' என இரண்டினைச் சொல்கிறார்கள். ஆகூழ் என்பது ஒருவருக்கு நல்லவை நடக்கின்ற காலம், போகூழ் என்பது ஒருவருக்குத் தீயவை நடக்கின்ற காலம்.

நான் கேள்வியை மறந்து தமிழ்ப்பாடம் நடத்து வதாக நினைப்பீர்கள். அப்படி இல்லை! ஈழத் தமிழர்களுக்கு இப்போது போகூழ்க்காலம் நடக்கிறது என்பதைச் சொல்வதற்காகவே மேல் விடயத்தைச் சொன்னேன்.

போர்க்காலத்தில் ஈழத்தமிழர்கள் பல துன்பங் களை அனுபவித்தார்கள். ஆனாலும் அக்காலத் தில் நம் இனம் தலைநிமிர்ந்தே நின்றது. அத னால் அக் காலத்தை ஆகூழ்க் காலம் என்று சொல்ல முடியாவிட்டாலும் நிச்சயம் அது நம் இனத்தின் போகூழ்க் காலம் அல்ல என்றே நினைக்கின்றேன்.

என்றைக்கு யுத்தம் முடிந்ததோ அன்றிலி ருந்துதான் எங்களது போகூழ்க் காலம் தொடங்கி யிருப்பதாய்த் தோன்றுகிறது.

- பதவிக்காய் அலையும் தலைவர்கள்.
- பேரின அதிகாரிகளுக்குச் 'சல்யூட்' அடிக்கும் நிர்வாகிகள்.
- அறிவார்ந்த சிந்தனையில்லாத கல்வி யாளர்கள்.
- தம்மை இனம் காட்டுதற்காய் சமூகப்பணி ஆற்றும் பெரிய மனிதர்கள்.
- நடிகைகளைக் காண, பனை மரம் ஏறும் இளைஞர்கள்.
- பாடசாலை வரை உட் புகுந்துவிட்ட போதை வஸ்து வியாபாரிகள்.
- போரின் பாதிப்பை எவ்விதத்திலும் அறியாமல், பொய்ப் போர் உணர்ச்சி காட்டும் இளைய வர்கள்.
- வெளிநாடுகளில் தம்மையும், தம் உறவினர் களையும் பாதுகாத்துக் கொண்டு இங் குள்ளவர்களின் வாழ்வைத் தீர்மானிக்க நினைக்கும் புலம்பெயர் தமிழர்கள்.
- தாம் பெற்று வைத்திருக்கும் செல்வத்தைக் கொண்டு, இங்குள்ள ஊடகங்களைத் தம்வயப்படுத்தி, நம் அரசியலில் நுழையத் தயாராகும் சில புலம் பெயர் செல்வர்கள்.

எனப் பல இருள் மேகங்கள் இன்று நம் இனத்தைச் சூழ்ந்து வருகின்றன. அத்தகைய மேகங்கள்தான் இன்று சுமந்திரனைச் சூழ்ந்து, அவரது அரசியல் இருப்பை இல்லாதொழிக்கப் பார்க்கின்றன.

சுமந்திரன் மேல் எனக்குத் தனிப்பற்றும் இல்லை, பகையும் இல்லை. இன்று நம் இனத் திற்குச் சுமந்திரனின் இருப்பின் அவசியத்தை நான் நன்கு உணர்கின்றேன்.

- சுய ஆளுமை
- அறிவுத் திறன்
- நிதானம்
- உலக அறிவு
- கால தேச வர்த்தமானங்கள் என்பவற்றை அறிந்து இயங்கும் ஆற்றல்
- நம் பேரினத் தலைவர்களுக்கும், உலகத் தலைவர்களுக்கும் சமதையாய் இருந்து பிரச்சினைகளை ஆராயும் தகுதி
- பதற்றம் இல்லாமல் கருத்துக்களைத் தெளிவு பட வெளிப்படுத்தும் இயல்பு
- அயராத உழைப்பு
- மக்கள் தொடர்பு

– எனச் சுமந்திரனிடம் இருக்கும் தகுதிகளோடு இன்று வேறு தமிழ்த் தலைவர்கள் எவரேனும் இருக்கின்றார்களா? என்பது தான் எனது கேள்வி.

'யதார்த்தவாதி வெகுசன விரோதி' என்பார்கள். சில யதார்த்த உண்மைகளைச் சொல்லப் போய்த்தான், இன்று சுமந்திரனைச் சிலர், தமிழ்த் தேசியத்தின் எதிர்ப்பாளராய்க் காட்ட முனைந்து நிற்கிறார்கள். அதே போல் யதார்த்த உண்மையை உரைப்பதால், இனி என்மேலும் சிலர் சேற்றினை அள்ளித் தூற்றப் போகிறார்கள். அது பற்றிக் கவலைப்படுபவன் அல்லன் நான்.

ஈழத்தமிழர் அரசியலில் இருந்து சுமந்திரனை அப்புறப்படுத்துவது ஒரு புறம் இருக்கட்டும். அப்படி அப்புறப்படுத்திய பின்பு, அந்த இடத்தில் அமர்த்த மேற் சொன்ன தகுதிகளோடு இருப்பவர்களின் பட்டியலை முதலில் சுமந்திரனின் எதிர்ப்பாளர்கள் வெளியிடட்டும். அப்படி எவரேனும் இருந்தால் உடனடியாகச் சுமந்திரனை அரசியலில் இருந்து அப்புறப்படுத்தி விடலாம்.

தன் செயல்களுக்கான காரணத்தை அவ்வப் போது சமூகத்திற்குச் சரிவர உரைக்காததும், சம்பந்தனின் கையாளாக இயங்கியதுமே சுமந் திரன் செய்த தவறு என்று நினைக்கின்றேன். சம்பந்தர், சுமந்திரனைக் கொண்டு பிரச்சனை களைக் கையாள வைத்து விட்டு, விளைந்த நன்மைகளைத் தான் ஏற்று தீமைகளைச் சுமந்திரன் மேல் சுமத்திவிட்டார்.

அண்மைக் காலமாக சுமந்திரன்மேல் பழி யேற்றும் வேலையைப் புதிதாய் முளைத்த ஊட கங்கள் சிலவே செய்து கொண்டிருக்கின்றன. அவ் ஊடகங்களின் பின்னால் பண முதலை



களான சில புலம் பெயர் தமிழர்கள் இருப்ப தாகச் சொல்கிறார்கள்.

அவர்கள் கடந்த சில தேர்தல்களில்கூட தம் செல்(வ)வாக்கைப் பயன்படுத்தித் தம் கையாட்களுக்கு 'சீற்' வாங்கிக் கொடுத்தும், அவர்களின் வெற்றிக்கு வழி செய்து கொடுத் தும் செயற்பட்டதாகச் செய்திகள் கசிகின்றன.

அத்தகையவர்கள் சுமந்திரனைப் போன்ற தொரு ஆளுமையாளனின் முன்னேற்றத்தை ஒருநாளும் விரும்ப மாட்டார்கள். தாம் 'குதிரை ஓட்டுவதற்கு' சுமந்திரன் வழிவிடமாட்டார் என அவர்கள் நினைப்பதால்தான், சுமந்திரனை ஒழித்துக்கட்டத் தம் ஊடகங்களினூடு முயன்று கொண்டிருக்கிறார்கள்.

இவ்வுண்மைகளை எல்லாம் என்றைக்குத் தமிழ் மக்கள் உணர்கிறார்களோ அன்றைக் குத்தான் நம் இனத்திற்கான ஆகூழ் பிறக்கும் என்று நினைக்கிறேன். என்னைக் கேட்டால் இன்றைய ஈழத்தமிழர் அரசியலில் சுமந்திரன் தவிர்க்க முடியாத ஓர் முக்கிய புள்ளி என்றே சொல்வேன்.

**சல்லடையாரின் சலிப்பு :- அவர் சுத்து மாத்துச் சுமந்திரன் அல்ல, இனத் திற்குச் சத்துச் சேர்க்கும் சுமந்திரன் ஆக்கும்..... இது எப்பிடி இருக்குங்கோ ஹீ....ஹீ......**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

## குரோதி தமிழ்ப் புது வருடம் இன்பத்தை அள்ளித் தரட்டும்!

சித்திரைப் புத்தாண்டு கதிரவனின் கால சக்கர நகர்வின் முதல் நாள்.

வான சாஸ்திரத்திலும் அறிவியலிலும் கோலோச்சிய நம் தமிழினம் ஓர் ஆண்டை இரு பிரிவுகளாக பிரித்துள்ளது. அவை சௌரமானம், சந்திரமானம் ஆகும். இதில் சௌரமானம் சூரியன் மேட ராசியில் இருந்து மீன ராசி வரையான பன்னிரண்டு ராசியில் சஞ்சரிக்கும் காலம் கலை சூரிய மாதங்களாக கணக்கிட்டு சித்திரை முதல் பங்குனிவரை உள்ள பன்னிரண்டு மாதங்கள் கொண்ட ஒரு ஆண்டு ஆகும்.

அறுபது தமிழ் வருடங்களின் சுற்றுவட்டத் தொடரில் 38 ஆவது வருடமான புதிய மங்களகரமான குரோதி தமிழ் புது வருடம் சித்திரை 1 ஆம் திகதி சனிக்கிழமை முன்னிரவு ஷஸ்டி திதி பரணி நட்சத்திரம், சித்த யோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் பிறக்கிறது.

புது வருடப் பிறப்பு - வாக்கியப் பஞ்சாங்கத்தின் படி 13 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 08 மணி 15 நிமிடத்திலும் பிறக்கின்றது.

மருத்து நீர்- விஷுபுண்ணிய காலம் (மருத்து நீர் வைக்கும் நேரம்) 13 ஆம் திகதி பிற்பகல் 04.15 மணிமுதல் பின் இரவு 14 ஆம் திகதி அதிகாலை 12.15வரையும். இந்த புண்ணிய காலத்தில் சகலரும் மருத்து நீர் தேய்த்து சிரசில் புங்கை இலையையும், காலில் ஆலம் இலையையும் வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும். மருத்து நீர் வைத்தல் என்பது முக்கிய விடயமாக புதுவருட தினத்தில் கருதப்படுகிறது.

இந்த மருத்துநீர் தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், திற்பலி மற்றும் சுக்கு என்பவற்றை



நீரில் கலந்து காய்ச்சப்படும். மருத்து நீர் வைத்து நீராடினால் புத்தாண்டின் நல்ல பலன்களை பெறலாம் என்பது நம்பிக்கை ஆகும்.

பிறக்கும் போது மேஷ ராசியில் ராஜ கிரகமான சூரியன் உச்சம் பெற்றிருக்க கூடவே சுக்கிரன், சந்திரன் இணைந்துள்ளனர். ரிஷபத்தில் ராகு, மிதுனத்தில் செவ்வாய், விருச்சிகத்தில் கேது, மகரத்தில் சனி, கும்ப ராசியில் குரு மீன ராசியில் புதன் என கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. பிலவ ஆண்டு மேஷ ராசியில் பிறந்தவர்களுக்கு வெற்றிகள் நிறைந்த ஆண்டாக அமையப் போகிறது.

எந்த மாதத்திலும் இல்லாத சிறப்பு சித்திரைக்கு மட்டும் உண்டு. சித்திரையில் மட்டும் அப்படி என்ன விசேஷம்? சித்திரை முதல் நாளுக்கு உள்ள முக்கியமானதும் முதன்மையானதும் சிறப்பு சித்திரை வருடப் பிறப்பு.

தமிழர்களது காலக்கணிப்பு முறையின்படி ஒரு ஆண்டுக்குரிய பன்னிரண்டு மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாக கருதப்படுகிறது. தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப்படுகின்றன. ஏனென்றால், இம் மாதங்கள் பூமிக்குச் சார்பாகத் தோற்றுகின்ற சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப்படு

தொடர்ச்சி ▼

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

# குரோதி தமிழ்ப் புது வருடம் இன்பத்தை அள்ளித் தரட்டும்!

தொடர்ச்சி▲

கின்றன. இராசிச் சக்கரத்தில் மேட இராசிக்குள் சூரியன் நுழைவதில் இருந்து அந்த இராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதமாகும்.

சித்திரை மாதம் 31 நாள்களைக் கொண்டது. ஆங்கில நாள்காட்டியில் ஏப்ரல் மாதம் 14 ஆம் நாள் முதல் மே மாதம் 14 ஆம் நாள் வரை தமிழ் சித்திரை மாதமாகும். சூரியன் மேட இராசிக்குள் நுழைவது சித்திரை மாதப் பிறப்பு எனப்படும். சித்திரை முதல் மாதம் என்பதால் இதுவே புதிய ஆண்டின் தொடக்கமும் ஆகும்.

இதனால் சித்திரை மாதம் முதல் நாளை உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழ் வருடப் பிறப்பாகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். இலங்கையில் தமிழ் – சிங்கள மக்களால் கொண்டாடப்படும் வைபவமாக புதுவருடப் பிறப்பு இருப்பதால் இது ஒரு தேசியப் பெருவிழாவாகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

புதிய எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வைத்து மங்கள கரமான திருநாளாகச் சித்திரைப் புதுவருடம் வரவேற்கப்படுகிறது. சித்திரை மாதம் பிறந்ததுமே இளவேனில்காலம் என்னும் வசந்த காலம் தொடங்குகிறது.

வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும், மலர்களும் பூத்துக் குலுங்கும். அச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும், கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக இந்தச் செயற்பாடு கருதப்படுகிறது.

ஐக்கியம், சமய, சமூக, கலாசார உறவுகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவைகளை எடுத்துக் காட்டும் வகையிலும் நல்லெண்ணம், நல்லுறவு, ஐக்கியம், அன்புப் பரிமாற்றம், குதூகலம், விருந்தோம்பல் போன்ற மனிதப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகையிலும் கொண்டாடப்படும் சமூக விழாவான புது வருடத்தில் இறைவழிபாடு, தானதர்மம், ஆசிபெறுதல் என்பவைகளையும் நாம் கடைப்பிடிப்பது வழக்கம்.

சித்திரை முதல் நாளன்று வீட்டை நன்றாக கூட்டி தூய்மை செய்ய வேண்டும். வாசலில் கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். வாயிற்படிகளுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு, மாவிலைத் தோரணங்களை கட்டி மங்கலம் சேர்க்க வேண்டும். வாயிற்படி நிலைவாயிலில் மஞ்சள் பூசி, சாணத்தால் மெழுகி, அழகிய மாக்கோலமிட்டால் திருமகள் வாசம் செய்வாள் என்பது நம்பிக்கையாகும்.

அத்தோடு மஞ்சள், குங்குமம் ஆகியவை நோய்க்கிருமிகளும் துஷ்ட தேவதைகளும் வாசல்படியை தாண்டி வராமல் தடுக்கும் சக்திகளாகும். புதுவருட தினத்தில் நம் நலன் காக்கவே இந்த நடைமுறை வழக்கத்துக்கு வந்தது.

ஆடை– வெள்ளை நிறப் பட்டாடை அல்லது வெள்ளைக் கரை அமைந்த புதிய பட்டாடையும், நீலம், வைரம் இழைத்த ஆபரணங்களையும் அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும் என்று வாக்கிய பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சித்திரை புதுவருடமன்று நம் வருங்கால பலன்களை அறிவது அவசியம்.

புதுவருட தினத்தில் தான தருமங்கள் செய்வது வழக்கம். ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும் புதிய விசிறிகளை தானம் செய்ய வேண்டும். சித்திரை பிறப்பதற்கு முந்தைய நாள் இரவு சாப்பாடு முடிந்தபிறகு பூஜை அறையை தூய்மை செய்து கோலமிட்டு வைத்து விட வேண்டும். வீட்டிலுள்ள பொன்,

தொடர்ச்சி▼

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

# குரோதி தமிழ்ப் புது வருடம் இன்பத்தை அள்ளித் தரட்டும்!

தொடர்ச்சி▲

வெள்ளி நகைகள், உட்பட அனைத்து ஆபரணங்களையும் பணம், நிலைக் கண்ணாடி, வெற்றிலை, பாக்கு, பழங்கள், தேங்காய், மலர்கள் முதலிய மங்கலப் பொருள்களையும் தயாரித்து, ஒரு மனையின் மீது இட்டு அதற்கு அழகிய கோலமிட்டு, பூஜைக்குரிய தெய்வத்தின் முன் வைக்க வேண்டும்.

அரிசி, பருப்பு, வெல்லம், பலா, மாம்பழம், வாழைப்பழம் ஆகியவற்றையும் வைத்து மறுநாள் காலை, சித்திரை மாதப் பிறப்பன்று அதிகாலையில் முதன் முதலாக வீட்டில் மூத்த பெண்மணி எழுந்து குளித்து புத்தாடை உடுத்தி இறைவன் முன்பு குத்துவிளக்குகளையும், ஊதுவத்திகளையும் ஏற்றி வைப்பார். அதற்கு பின்பு, அவர் வீட்டில் தூங்கும் ஒவ்வொருவரையும் எழுப்பி, கண்களை மூடிய நிலையிலேயே சுவாமியின் முன்பு அழைத்துச் சென்று, கண்களை திறக்கச் சொல்வார். பூஜைக்கு உரிய தெய்வத்தையும், பூஜைக்கு வைத்துள்ள மங்கலப் பொருள்களையும் முதன் முதலாக தரிசிக்கும்படி செய்வார். இவ்வாறு செய்தால் வருடம் முழுவதும் மகிழ்ச்சி பொங்கும் எனவும் மங்கலப் பொருள்கள் செழித்து இருக்கும் என்பது நம்பிக்கை.

அறுசுவை உணவு – சித்திரை மாதத்தில் சூரியன் மேஷ ராசியில் மிகவும் உச்சமாக பிரகாசிப்பதால் அன்றைய தினம் பானகம், நீர், மோர், பருப்புவடை ஆகியவற்றை நைவேத்தியம் செய்ய வேண்டும். இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என அறுசுவை கொண்ட உணவுகளை சமைத்து உண்பர்.

மதிய உணவில் வேப்பம்பூ பச்சடி, மாங்காய்ப் பச்சடி, பருப்பு வடை, நீர்மோர், பருப்பு, பாயாசம், மசால்வடை போன்றன இடம்பெறுதல் அவசியம். வேப்பம் பூ கசக்கும் என்றாலும் மனித உடலிலுள்ள ரத்தத்தை தூய்மை செய்வதில் வேப்பம் பூவுக்கு நிகராக வேறு எந்த மூலிகையும் இல்லை. இதற்காகவே இந்த உணவு உண்ணப்படுகிறது.

கைவிஷேடம் – வாக்கிய பங்சாங்கத்தின் படி 14 முற்பகல் 07.57முதல் 09.55 வரையும் மற்றும் இரவு 06.17முதல் 08.17வரையும் 15 ஆம் திகதி காலை 09.08 முதல் 09.51 வரையும் செய்தல் சிறப்பு.

சித்திரை முதல் நாளன்று பெருவாரியாக மக்கள் கோயில்களுக்கு சென்றும் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டும் மற்றும் பல வகைகளிலும் வருடப் பிறப்பை சிறப்பாக கொண்டாடுவர். சித்திரைப் புதுவருடத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் கைவிசேடமாகும். ஆரம்ப காலத்தில் வீட்டின் தலைவி உரிய சுப நேரத்தில் சிறிய மூலிகைப் பொட்டலம் ஒன்றைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டு பிறக்கும் புத்தாண்டு நிமித்தம் முதல் முறையாக தண்ணீரை கிணற்றிலிருந்து வெளியில் எடுப்பதையே கை விசேடமாக கருதப்பட்டது. ஆயினும் நாளடவில் கைவிசேடம் என்பது சுபமுகூர்த்தத்தில் பணத்தை கொடுப்பதும் எடுப்பதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. பணத்தை கைவிசேடமாக பெற்றுக்கொள்வார்கள்.

கொடுக்க பட்ட எல்லாவற்றையும் எண்ணி (நெல்லு உட்பட) அது ஒற்றை விழுந்தால் நல்ல பலன் என்பது ஐதீகம். கைவிசேடம் பரிமாறிக்கொள்வது என்பது ஒரு பாரம்பரியமான வழக்கமாகும்.

மூத்தோர்களிடமிருந்து கைவிசேடம் பெற்றால் அந்த ஆண்டு முழுவதும் பணவரவும் பல நன்மைகளும் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கைவிசேடமாக பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி▼

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்

# குரோதி தமிழ்ப் புது வருடம் இன்பத்தை அள்ளித் தரட்டும்!

தொடர்ச்சி▲

சித்திரைப் புதுவருடம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பெருவிழாவாக இங்கு சிறப்புப் பெறுகிறது. தமிழ், சிங்கள மக்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்புகளை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்திருந்தாலும் கொண்டாடுவதில் சில தனித்தனியான பாரம்பரிய கலாசார நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார்கள்.

சமாதானம் சந்தோஷம் ஆகியவற்றை சுமந்து வெள்ளைநிற வண்டியில் வரும் இந்திரதேவ குமரனின் வருகையைக் கொண்டாடும் விதத்திலேயே சித்திரை புத்தாண்டை சிங்கள பௌத்தர்கள் கொண்டாடுவதாக வரலாறு கூறுகின்றது. புத்தாண்டு பிறக்கும் செய்தியைக் 'குயில்' தன் குரலால் உலகறியச் செய்வதாக நம்பப்படுகின்றது.

சிங்கள மக்கள் தமது புதுவருடத்தில் புத்தாண்டுக்கான ஏற்பாடுகள் அதற்கான சுபநேரத்தில் அரிசி இடித்து அடுப்புக்கட்டி பலகாரம் சுடுவதுடன் ஆரம்பிக்கப்படுவது வழக்கமாகும். அடுத்ததாக பழைய வருடத்துக்கான ஸ்நானம் இடம்பெறும். உடலையும் உள்ளத்தையும் சுத்தப்படுத்தும் நோக்கில் இடம்பெறும் இந்தக் குளியல் பழைய வருடத்துக்கான இறுதிக் குளியலாகும். புத்தாண்டுக்கான விசேட நீராடல் சிங்களவர் மத்தியில் வழக்கத்தில் இருந்து வருகின்றது.

புத்தாண்டு பிறப்பதற்கு முன் எழுந்து மருந்து எண்ணை வைத்து குளிப்பார்கள். விகாரைக்கு சென்று வழிப்பட்டு புத்தாண்டு பிறப்பு நேரத்தில் பட்டாசு கொளுத்துவர். புத்தாடை உடுத்தி பால் பொங்குதல், பால்சோறு சமைத்தல் அத்துடன் தின்பண்டங்கள் தயாரித்தலில் ஈடுபடுவர். இத்துடன் பணியாரம், வாழைப்பழம் மற்றும் தின்பண்டங்களும் வைத்து படையல் இடுவர்கள். இந்தப் படையலில் முக்கியமாக பால் சோறு இருக்கும்.

சிலவேளை புண்ணியக்காலம் இரவில் முடிவடையுமாயின், இந்த நிகழ்வுகள் அடுத்த நாளிலோ அல்லது அடுத்து சில நாள்களிலோ தமது வசதிக்கேற்ப வைத்துக்கொள்வர்.

சிங்கள பௌத்தர்கள் சித்திரைப் புத்தாண்டைப் பகைமை ஒழிப்புக்கான சிறந்த வாய்ப்பாக உபயோகப்படுத்திக் கொள்வது வழக்கத்தில் இருந்து வருகின்றது. நீண்ட காலமாக பகைமை கொண்டிருந்த நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரை பார்க்கச் சென்று பகைமை தீர்த்துக் கொள்ளப்படும்.

புதுவருடம் பிறந்ததன் பின்னர் பஞ்சாங்கக் கணிப்பின்படி சுப தினத்தில் சுப நேரத்தில் தொழிலிலுக்குச் செல்வது அல்லது தொழிலை ஆரம்பிப்பதன் மூலம் தொழில் விருத்தி அடையும் என்பதே எதிர்பார்ப்பாரும், ஆரம்ப காலத்தில் முற்றத்தில் விளக்கேற்றி வைத்து, அதன் அருகே வைக்கப் பட்டிருக்கும் மண்வெட்டியைக் கொண்டு வீட்டின் தந்தை மண்ணை வெட்டி கத்தியால் ஒரு பிலா மரத்தின் கிளையை வெட்டுவதே வழக்கத்தில் இருந்து வந்தது. காலப் போக்கில் அந்தந்த ஆண்டுக்கு ஏற்ப பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்ட வர்ண உடைகளை அணிந்து, சுப திசை சுப நேரம் ஆகிய வற்றுக்கு அமைய அலுவலகத்துக்குச் செல்வதே வழக்கமாகி விட்டது.

பிறக்கவிருக்கும் இந்த வருடம் எல்லோருக்கும் நல்ல சுபீட்சம் தரும் ஆண்டாக அமைய இறைவனைப் பிராத்திப்போம்.

- ஆர்.நடராஜன் ஹரன் -

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



## அமைதியும் புரிந்துணர்வும் கூடிய நல்வாழ்வு அமையட்டும்...!

தமிழ் வருடங்களில் சுப மங்களகர குரோதி என்னும் நாமத்துடன் பிறக்கும் தமிழ் புத்தாண்டானது சிறப்பான ஒரு வருடமாக அனைவருக்கும் அமைய வேண்டும்.

உலக மக்கள் அனைவரும் கடந்த தசாப்த காலமாகப் பல்வேறு இன்னல் களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளோம். அதில் குறிப்பாக எமது நாட்டு மக்கள் இன்னோரன்ன துயரங்களைத் தாங் கிச் சகித்து வாழ்ந்து வருகின்றனர்.

அனைத்து சமயங்களும் வாழ்வி யலை வழிகாட்டிச் சுட்டி நிற்கின்ற அதே வேளையில் எமது சமயமானது அன்பு, கருணை, கொல்லாமை, பிறருக்குத் தீங்கு செய்யாமை, புரிந்துணர்வு போன்ற நற் செயல்களைச் சுட்டி நிற்கிறது. இவை போன்ற விடயங்களைத் தொலைத்து விட்டோம் என்னும் காலப் பகுதியில் நாம் அனைவரும் இருக்கிறோம்.

நாம் எமது குடும்ப உறவுகளிடம் அன்பு செலுத்துவது போல் ஏனைய இனத்தார், சமூகத்தினர், சமயத்தாருடன் அன்பு செலுத்துதல் வேண்டும். மேலும் ஒவ் வொருவருடைய தனித்துவ பண்பாட்டை மதித்துப் போற்றுதல் வேண்டியதும் பிர தானமான ஒன்றாக காணப்படுகிறது.

அதனோடு தமிழ் மக்களாகிய நாம் எமது தேசத்தில் தொடர்ந்தும் வழிபாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட பல சிக்கல்களைச் சந்தித்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த அனைத்து நற்குணங்கள், விடயங்களையும் எம்தேசத்து அனைத்து மக்களும் பின்பற்ற வேண்டும்.

நாம் தமிழ், சிங்களப் புத்தாண்டை அரச விடுமுறையுடன் இரு இனங்களும் மகிழ்வாய் கொண்டாடுகின்றோம் அதனைப் போல ஒவ்வொரு கணமும் அமைய வேண்டும். ஒவ்வொரு விட யத்திலும் அமைய வேண்டும். மகிழ்ச்சி யும் அதிகரிக்க வேண்டும்.

புது வருடத்தில் நாம் அனை வரும் இறை பிரார்த்தனையுடன் கூடிய இன்பகரமான வாழ்வு அமைய வேண்டும் என பரம்பொருளை வேண்டி இறை பிரார்த்தனையில் ஈடுபடுவோம்.

இந்தச் சமயத்திலே இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் வழிகாட்டுதலை யும் நிறைந்த இறை பிரார்த்தனையும் நல்லாசிகளையும் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சுபமங்களம்.

சிவாகம கலாநிதி சிவஸ்ரீ
கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்,
(தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.
சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள்.
செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு)



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



# புத்தாண்டில் அனைவர் வாழ்விலும் இருள் நீங்கி ஒளி பிறக்கட்டும்...!

**வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குரு**

மலரும் புத்தாண்டு அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சியை அள்ளித் தரும் ஆண்டாக அமையட்டும்.

60 வருடங்களில் 36 ஆவது வருடமாகிய மங்களகரமான குரோதி வருடம் 13.04.2024 சனிக்கிழமை முன்னிரவு 8 மணி 15 நிமிடத்தில் மீருக சீரிடம் 3 ஆம் பாதத்தில் மிதுன இராசியில் வளர்பிறை சஷ்டி திதியில் துலா லக்கினத்தில் மிதுன நவாம்சத்தில் சனி கால வேளையில் தாமஸ குணவேளையில் மலர்கின்றது.

மலரும் புத்தாண்டில் அனைவர் வாழ்விலும் இருள் நீங்கி ஒளி பிறக்கட்டும். யாவரும் சூரிய உதயத்துக்கு முன் கண் விழித்து விதிப்படி ஸ்நானம் செய்து வெள்ளை நீல நிற புத்தாடை அணிந்து ஆலயத்துக்குச் சென்று குல தெய்வத்தை வணங்கிப் பெரியவர்களின் ஆசி பெற்று, மகிழ்ச்சியாக புத்தாண்டை வரவேற்போமாக.

இனமத வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் அடியேனின் இனிய சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சேரும் ஆண்டாய் அமைய எல்லாம் வல்ல கோடிமாரி தாயவள் பாதம் பணிந்து நல் ஆசிகளையும் நல் வாழ்த்துக்களையும் கூறி அமைக்கின்றோம்.

‘இன்பம் சூழ்க எல்லோரும் வாழ்க’
‘வாழ்க வளமுடன்’
‘சுபம் மங்களம்’
‘அன்பே சிவம்’

‘சிவாகம சித்தாந்த ஞான தேசிய பானு’
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,
பிரதம குரு, வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.
ஆதின கர்த்தா, புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம், தென்புலோலி.
பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்.



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



## மானிடப்பிறவியின் மகத்தும் உணர்ந்து வாழ்நாளைப் பேணிப் பாதுகாப்போம்

**புத்தாண்டு ஆசிச்செய்தியில் செஞ்சொற்செல்வர்**

அனைவருக்கும் எனது இதயபூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக. குரோதி வருஷம் பிறக்கிறது. இவ்வருடத்தில் எல்லோரும் இன்புற்று வாழ இறைவனை மன்றாடுவோம். புதிய ஆண்டில் உலகம் முழுவதும் தர்மம் நிலைத்திட வேண்டுதல் செய்வோம்.

கடந்த ஆண்டில் நாம் விட்ட தவறுகளை எண்ணி இனிமேலும் அத்தவறுகள் தொடராமல் இருக்க எம்மை நாம் ஒழுங்குபடுத்திக்கொள்வோம். அரிய பிறவியாகிய மானிடப்பிறவியின் மகத்துவத்தை உணர்ந்து வாழ்நாளைப் பேணிப் பாதுகாப்போம்.

புதிய ஆண்டு பிறக்கும் வேளை திருக்கோவில்களுக்குச் சென்று குடும்பம் குடும்பமாக வழிபாடு செய்வோம். உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் வாழ்த்தினைத் தெரிவித்து உறவை வலிமைப் படுத்துவோம்.

உதவியற்று இருப்பவர்களுக்கு உறுதுணை செய்வோம். கோபத்தை மறந்து அன்பைப் பெருக்குவோம். பெற்றோர்களுக்குரிய கடமையைப் பேணிப் பாதுகாப்போம். எங்கள் பிள்ளைகளை சரியான வழியில் ஆற்றுப்படுத்துவோம்.

எங்கள் மண்ணில் நீதியும் நிம்மதியும் நிலைத்திட அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம். அர்ப்பணிப்பு மிக்க அறச் சிந்தனை உடைய தலைமைத்துவத்தை எம்மண்ணில் வளர்த்தெடுப்போம். எமது பாரம்பரியமான பண்பாட்டு நெறிமுறைகளை காத்திட முயல்வோம்.

அன்பர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி
ஆறு.திருமுருகன்.
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம், தெல்லிப்பழை
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



# புதிய சிந்தனைகளால் புத்தாக்கம் பிறக்கும்...!

## சித்திரை புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி!!

புதுப்பித்தல் வாழ்க்கைக்குப் புதிய நம்பிக்கை தரும். புதுப்பிப்புக்களின் அடிப்படையிலேயே நாடு, தேசம் உலகம் முன்னேற முடியும். புதிய சிந்தனைகளாலேயே புத்தாக்கம் பிறக்கும்.

புதிய வருடம் பிறத்தல், புதிய நாள் காட்டி, பருவத்துக்குப் பருவம் ஏற்படும் புதிய மாற்றங்கள் உலக மக்களுக்கான வாய்ப்புக்களை புதுப்பிக்கின்றன.

இந்த புதுப்பித்தல்களுக்குப் பின்னால் மற்றொரு மிக முக்கியமான விடயமும் உள்ளது. அதுவே சமூக ஒற்றுமையும் ஒருமைப்பாடும் ஆகும்.

தமிழ், சிங்களப் புத்தாண்டை உறவுகளையும் ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்டே புதுப்பித்துக் கொள்கிறோம். உலக நாடுகள் அனைத்தும் இந்த சம்பிரதாயத்தைப் பின்பற்றியே புத்தாண்டுக் கொண்டாட்டங்களைக் கட்டமைத்துள்ளன.

புத்தாண்டு நமக்குச் சொல்லும் பாடத்தை இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்டுவது பொறுத்தமானது என நம்புகிறேன்.

புதிய ஆண்டில், ஒரு நாடு என்ற வகையில் சரியான வழியில் முன்னேறுவதற்கு சமூக உறவுகளும் ஒற்றுமையுமே அடிப்படைக் காரணிகளாகும் என்பதை நினைவுக் கூறுவதோடு அனைவருக்கும் புத்தாண்டு சிறப்பானதாக அமையட்டும் என பிரார்த்திக்கிறேன்.

**ரணில் விக்ரமசிங்க,**
**ஜனாதிபதி,**
**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு.**



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



# பெருமைமிகு நாட்டை உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம்!

## சித்திரைப் புத்தாண்டுச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

மீன ராசியில் இருந்து மேஷ ராசிக்கு சூரியன் பெயர்ச்சியுடன் தொடங்கும் சிங்கள, தமிழ் புத்தாண்டை உலகில் உள்ள மற்றும் இலங்கை வாழ் சிங்கள, தமிழ் மக்கள் வெகு விமர்சையாகக் கொண்டாடும் பண்டிகை எனவும் குறிப்பிடலாம்.

இலங்கையின் மாபெரும் கலாசார விழாவாக அறியப்படும் இந்த நாளில், அனைவரும் ஒரே சுப நேரத்தில் இருந்து ஒரே கடமையில் ஈடுபடும் இந்த சம்பிரதா யத்தின் காரணமாக, சிங்கள, தமிழ் புத் தாண்டு உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாகக் காணப்படுகின்றது.

இந்த நாளில் அனைத்து மக்களும் எதிர்வரும் ஆண்டில் செழிப்பு மற்றும் சௌபாக்கியத்தை எதிர்பார்த்து, தங்களால் இயன்றவரை இந்தச் சடங்குகளை செய் கின்றனர்.

ஆனால் கடந்த காலம் இலங்கை வாழ் மக்களுக்கு சிறந்த காலப் பகுதியாக அமையவில்லை என்று நான் நம்புகிறேன். வரிச்சுமை அதிகரிப்பு, பொருள்களின் விலையேற்றம், நாட்டில் உள்நாட்டு நெருக்கடி என பல பிரச்சினைகளை நாடு எதிர் கொண்டதுடன் தற்போது தேர்தல் ஆண்டா கவும் காணப்படுகின்றது.

இந்த வருடம் மக்கள் எதிர்பார்க்கும் அரசு நாட்டில் உருவாகும் என்பதும், மீண்டும் எமது தாய் நாட்டுக்குச் சுபீட்சம் வரும் என் பதும் எனது நம்பிக்கையாகும்.

மேலும், தற்போது காணப்படும் வங்கு ரோத்து நிலையிலிருந்து விடுபட்டு, மீண்டும் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக எமது நாட்டைக் கட்டி எழுப்புவோம்.

அமைதியும், மகிழ்ச்சியும், நிம்மதியும் கொண்ட பெருமைமிக்க நாட்டை உரு வாக்க நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் வந்துவிட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை முன் னைய வாழ்க்கைத் தரத்துக்குக் கொண்டு செல்வது எமக்கு பாரிய சவாலாக உள்ளது.

அந்தச் சவாலை 220 லட்சம் பேரும் ஒன்றாகச் செயல்பட்டால் சமாளிக்க முடியும். ஒவ்வொரு இருண்ட யுகத்திலும் ஒரு வெள்ளிக் கோட்டைப் பார்ப்பது போல, இந்த இருண்ட யுகத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் ஒரு வளமான யுகத்தை உருவாக்கவும் அணிதிரள்வோம்.

**சஜித் பிரேமதாஸ,**
**எதிர்க்கட்சித் தலைவர்.**



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



## தமிழர்கள் ஏன் சித்திரை ஒன்றை புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்?

சூரியன் மிகத் துல்லியமாகக் கிழக்கில் உதிக்கும் நாள் தான் சித்திரை 1. எனவேதான் தமிழர்கள் சித்திரை 1 ஐப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.

சோபகிருது வருடம் போய் இன்று குரோதி வருடம் பிறக்கிறது. இது 60 வருட சுழற்சியில் 38 ஆவது வருடமாகும்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் துல்லியமாக கணித்து கூறிய வானியல் சாஸ்திரம் இந்து சமயம் சொல்லி வைத்த நமக்குத் தெரியாத உண்மைகள்.

சித்திரை 1, ஆடி 1, ஐப்பசி 1, தை 1 இவற்றை எல்லாம் விழாவாக நாம் கொண்டாடுவது ஏதோ ஒரு சடங்கு அல்லது பழக்கம் என்று நினைக்கிறோம்.

நம் முன்னோர்கள் இதுக்குப் பின் புலத்தில் மிகப் பெரிய அறிவியலை வைத்திருக்கின்றார்கள் தெரியுமா...?

“சூரியன் உதிக்கும் திசை கிழக்கு” என்று சிறு பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம்.

என்றாவது ஒரு அளவை வைத்து சூரியன் உதிக்கும் போது சோதித்து இருக்கிறோமா? என்றால் கண்டிப்பாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

வெள்ளையர்கள் எமது அறிவியலை அழித்துவிட்டு, ஒரு முட்டாள் தனமான கல்வியைப் புகுத்தி விட்டான் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

ஆம் சூரியன் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே சரியாகக் கிழக்கே உதிக்கும். பின்னர் சிறிது சிறிதாக வடகிழக்கு நோக்கி நகர்ந்து, ஒரு குறிப்பிட்ட புள்ளியில் மறுபடியும் தெற்கு நோக்கித் திரும்பும்.

அதன் பின் மறுபடியும் ஒரு நாள் கிழக்கே உதிக்கும், அதன் பின்னர் தென்கிழக்கு நோக்கி நகரும்.

இப்படி சரியாக கிழக்கில் ஆரம்பித்து, வடகிழக்கு, தென்கிழக்கு என்று போயிட்டு மறுபடியும் கிழக்குக்கு வர ஆகும் நேரம் சரியாக ஒரு வருடம் 364 நாள்கள்.

சரி... இதற்கும் தமிழ் மாதத்துக்கும் என்ன சம்பந்தம்?

சூரியன் தன் பயணத்தை கிழக்கில் ஆரம்பிக்கும் நாள் தான் சித்திரை 1. தமிழ் புத்தாண்டு. (In science it is called Equinox). பின்னர் சரியாக வடகிழக்கு புள்ளிதான் ஆடி 1. ஆடி பிறப்பு (solstice). மறுபடியும் கிழக்குக்கு வரும்போது ஐப்பசி 1. தீபாவளி (equinox). மீண்டும் சரியாக தென்கிழக்கு - இப்போது தை1. பொங்கல் (solistice).

இந்த வானியல் மாற்றங்களையும், அதனை சார்ந்த பருவ கால மாற்றங்களையும் நன்கு உணர்ந்து இருந்த நம் முன்னோர்கள், இவற்றை அனைவரும் அறியும் வகையில்தான் திருவிழாக்களாக கொண்டாடினர்.

சித்திரை (vernal equinox) - புத்தாண்டு, ஆடி 18 (summer solstice) - ஆடிப் பிறப்பு, ஐப்பசிஅமாவாசை (autumn equinox)- தீபாவளி, தை 1 (winter solstice) - பொங்கல்.

இது நமது அடுத்த தலைமுறைக்கு நமது பாரம்பரியத்தை வெறும் சடங்காக மட்டும் அல்லாமல் அதில் மறைந்துள்ள அறிவியலையும் கொண்டு சேர்ப்பது எமது கடமை.

**விபுலமாமணி தேசமான்ய**
**வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு.**

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



## எமக்குக் கல்வியும் – பொருளாதாரமுமே யுத்தத்தால் முடியாததைச் சாத்தியமாக்கும்

### புத்தாண்டுச் செய்தியில் அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

புதிய விடியல் ஒன்றிற்காக காத்திருக்கும் உலக மக்களுடைய வாழ்வில் வசந்தம் வீசும் ஆரம்ப நாளாக இந்தச் சித்திரைப் புத்தாண்டு அமைய வேண்டும்.

உலகில் ஒரு பகுதி மக்கள் பட்டினியால் வாடும் அதேவேளையில் – இன்னொரு பகுதி மக்கள் யுத்த பூமிக்குள் சிக்கித் தவிக்கின்றனர்.

இந்த இரண்டையுமே அனுபவித்தவர்கள் எம் மக்கள்.

எம் நாட்டு மக்கள் குறுகிய கால இடைவெளிக்குள் யுத்தம், கொரோனா பேரிடர், பொருளாதார நெருக்கடி, அரசியல் ஸ்திரமற்ற தன்மை மற்றும் இயற்கையின் சீற்றம் எனப் பல சவால்களுக்கு முகம் கொடுத்தனர்.

நாட்டு மக்கள் இவ்வாறான பலத்த சவால்களில் இருந்து மீண்டு வர முயற்சிக்கின்றனர். அது சிலரால் முடிகிறது. பலருக்குச் சாத்தியமற்றதாகி விடுகின்றது.

கல்வி மற்றும் பொருளாதார ரீதியாக ஒவ்வொருவரும் தம்மை ஸ்திரமாக்கிக் கொள்வதன் ஊடாகவே நாட்டிலும் – நாட்டு மக்களுடைய வீட்டிலும் வசந்தம் வீசும்.

மாதங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது சித்திரை மாதம். வசந்த காலத்தின் ஆரம்பமாக இந்த மாதம் விளங்குகின்றது. எனவே நாட்டு மக்கள் இந்தச் சித்திரைப் புத்தாண்டில் தம்மை பொருளாதார ரீதியாக வளப்படுத்தத் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

அத்துடன் மாணவர்கள் தொழில் சந்தைக்குப் பொருத்தமான துறையைத் தெரிவு செய்து தொழில் உலகுக்குத் தம்மை தயார்படுத்த உறுதிபூண வேண்டும். அந்த வகையில் யாழ். மாவட்ட மாணவர்களுக்கு அந்த வாய்ப்பை என் கனவு யாழ். அறக்கட்டளை ஊடாக இலவசமாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். அந்த சந்தர்ப்பத்தை மாணவர்களும் –இளைஞர்களும் பயனுள்ளதாக்க வேண்டும்.

கல்வியும் – பொருளாதாரமுமே யுத்தத்தால் முடியாத ஒன்றை சாத்தியமாக்கும் வல்லமை பொருந்தியவை.

அத்துடன் நாம் முப்பது வருட காலமாக அனுபவித்த துயரங்களை உலகின் எங்கோ ஓர் மூலையில் இருக்கும் மக்கள் இன்றும் அனுபவித்து வருகின்றனர். யுத்தத்தின் வலிகளை அனுபவித்த மக்கள் நாம். எம்மால் நிச்சயமாக இன்று யுத்த பூமிக்குள் சிக்கித் தவிக்கும் உறவுகளுடைய ஏக்கத்தை உணர்ந்து கொள்ள முடியும்.

நான் இந்தப் புத்தாண்டில் இறைவனிடம் வேண்டிக் கொள்வது ஒன்றே ஒன்று தான். யுத்தம் இல்லாத சந்தோச பூமியில் நாம் அனைவரும் மனித மாண்புடையவர்களாக – அடுத்தவர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக் கூடியவர்களாக வாழ வேண்டும் என்பதே.

அந்தவகையில் இன்று பல்வேறு கனவுகளுடன் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் நாட்டு மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகின்றேன்.

அங்கஜன் இராமநாதன்,
(யாழ். மாவட்ட
நாடாளுமன்ற உறுப்பினர்,
நாடாளுமன்றக் குழுக்களின்
பிரதித் தவிசாளர்)

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



## திடமான நம்பிக்கை மாத்திரமே மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்!

### சித்திரை புத்தாண்டுச் செய்தியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளர் தெரிவிப்பு

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலை நிறுத்தி எழுச்சி கொள்ளும் சமூகமாய் இன்புற்று வாழ்வதற்கு வழி சமைக்கட்டும்.

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டில் இலங்கை வாழ் சமூகத்தினருக்கு வளமான வாழ்வும் குறைவற்ற செல்வமும், கிடைத்திட வேண்டும். சித்திரைப் பிறப்பு சகல வகையிலும் வசந்தத்தை உருவாக்கக் கூடியது. இன, மத, மொழி, சாதி, சமய வேறுபாடுகளைக் கலைந்து எல்லோரும் ஒரு தாய் மக்களென உலகறியச் செய்யும் சிறப்பு நாளாகும்.

இந்தச் சித்திரைப் புத்தாண்டில் மனிதம் நிரந்தரமாய் நிலைத்து புதிய சாதனைகளையும், வெற்றிகளையும் பெற்று வழி மறிக்கும் தடைகளைத் தகர்த்து மகிழ்ச்சி பொங்கும் நன்நாளாக அமைய இறைவனை பிராத்திப்போம்.

கடந்த வருடம் எமது மக்கள் எத்தனை துன்பங்களை அனுபவித்திருந்தாலும் இனிவரும் காலங்கள் நலமாக அமையும் என்ற திடமான நம்பிக்கை மாத்திரமே எமது மக்களுக்கு நிரந்தரமான மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

தாங்கள் என்னதான் புறக்கணிக் கப்பட்டாலும் ஒதுக்கப்பட்டாலும் கூட தமது தெய்வ நம்பிக்கை, விருந்தோம்பல், தொழில் கடமைகள், இவை எதிலுமே எமது மக்கள் பின்னின்றதில்லை.

எமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு நாங்கள் தொலைநோக்கு சிந்தனையோடு செயற்பட வேண்டும். எனவே எல்லாம் வல்ல இறைவன் எமது மக்களுக்கு வழங்கியுள்ள திடமான மனநிலையும் கிடைத்ததை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளும் பண்பும் தொடர்ந்தும் நிலைக்க வேண்டும்.

எதிர்வரும் காலங்களை நாமே சிறப்பாக்கிக் கொள்ளும் மன உறுதியை எமது சமூகம் பெற வேண்டும்.

**மருதபாண்டி ரமேஸ்வரன்,**
**தவிசாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**நுவரெலியா மாவட்டம்.**



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பிதழ்



# பொருளாதாரச் சவால்களை வெல்லும் வருடமாக புதுவருடம் அமைய வேண்டும்!

## சித்திரைப் புத்தாண்டுச் செய்தியில் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

தமிழ் மக்களின் பாரம்பரியம், தொன்மை என்பவற்றுக்கு அமைய சித்திரை 14 ஆம் நாள் புது வருடம் பிறக்கிறது. அதற்கமைய இந்த ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி குரோதி எனும் தமிழ் புத்தாண்டு பிறக்கிறது. இந்தப் புது வருடத்தில் சாந்தியும், சமாதானமும் மேலோங்கி வறுமைகள் நீங்கி எல்லா வளங்களுடனும் அனைவரும் வாழ வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதேதினத்தில் சிங்கள மக்களும் தங்களின் புதுவருடப் பிறப்பை கொண்டாடுகின்றனர். பல்லின சமூகம் வாழும் இலங்கைத் திருநாட்டில் இன, மத நல்லிணக்கத்தை மேலும் பறைசாற்றும் வகையில் ஒரு தேசிய பண்டிகையாக சித்திரைப் புதுவருடப் பிறப்பு கொண்டாடப்படுகிறது. தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக பொருளாதார சவால்களை வெற்றிக்கொள்ளும் வருடமாக மலரும் புதுவருடம் அமைய வேண்டும்.

வருடப் பிறப்பின் போது பின்பற்றப்படும் சம்பிரதாய பூர்வ நடவடிக்கைகள் எம்மவர்களின் மரபுகளை தொடர்ச்சியாக பேணும் ஒன்றாகவே திகழ்கின்றது. அந்தவகையில், மருத்துநீர் வைத்துக் குளித்தல், புத்தாடை அணிதல், நறுமணங்களை பூசிக் கொள்ளுதல், மத வழிபாடுகளில் ஈடுபடுதல், பெரியோர்களிடம் ஆசி பெறுதல், கை விசேடம் வழங்கல் ஆகிய செயற்பாடுகளின் ஊடாக மரபுகள் பேணப்படுகின்றன. அத்துடன் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படும் போட்டிகள், கலை நிகழ்வுகள் ஊடாக நல்லிணக்க செயற்பாடுகளும், சமரசமாக வாழும் தன்மையும் ஏற்படுகிறது.

“இனி என்னை புதிய உயிராக்கி, எனக்கேதும் கவலையறச் செய்து, மதி தன்னை மிகத் தெளிவு செய்து என்றும் சந்தோசம் கொண்டிருக்கச் செய்வாய்”

என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு அமைய, புது வருடத்தில் புதிய சிந்தனைகளை எம்மில் தோற்றுவித்து, மகிழ்ச்சி பொங்கும் வளமான வாழ்வை பெற இறையாசி வேண்டி அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன்.

திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,
கௌரவ ஆளுநர்,
வடக்கு மாகாணம்.



# இன்றைய ராசி பலன்கள் - 13.04.2024




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். உங்களின் உறுதி மற்றும் தைரியம் வெற்றி பெற உங்களுக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை சீராக ஆற்று வீர்கள். பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடிப்பீர்கள்.

உங்கள் தாயுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக் கும். உங்கள் பணிக்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள். இது உங்களுக்கு கூடுதல் பண வரவாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப் பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.




நீங்கள் யதார்த்தமாகவும் தொழில் சார்ந்த அணுகுமுறையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இன்று பயணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இசை நிகழ்ச்சிக ளில் பங்கு கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை சிறிது கவனமுடன் மேற்கொள்ள வேண்டும். பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும். அதன் மூலம் உங்கள் பணிகளை எளிதாக ஆற்ற இயலும்.

இன்று காதலுக்கு உகந்த நல்ல அல்ல. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

பணப்புழக்கம் மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பு ஏற்படாமல் இருக்க நீங்கள் கவனமாகக் கையாள வேண்டும்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இது உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் பணிகளை முன் கூட்டியே திட்டமிடுங்கள். இன்று நீங்கள் சில சௌக ரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாத நிலை இருக்கும்.

உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள். உங்கள் உணர்வுகளைக் கட்டுபடுத்த வேண்டும். அன்பை வளர்க்க வேண்டும்.

வீட்டின் புனரமைப்பு மற்றும் பராமரிப்புக்குப் பணம் செலவு செய்ய நேரும். பணத்தை கவனமாகக் கையா ளவும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று உங்களுக்கு சுமூகமான நாளாக இருக்கும். இன்று புத்துணர்ச் சியுடன் இருப்பதாக உணர்வீர்கள். சுப காரியங்களில் பங்கு கொள்வீர் கள்.

பணியில் வெற்றிகரமான பலன்கள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் திருமணத்தைத் திட்டமிடலாம். அதற்கான ஆயத்தங்கள் செய்து நீங்கள் மகிழலாம்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும்.உங்க ளால் சிறிது பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் முயற்சிகள் வெற்றி பெரும். எதிர்பாராத நன்மைகள் கிடைப்பதற் கான சாத்தியம் உள்ளது. இது உங்க ளுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியை யும் அளிக்கும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று தேவையற்ற செலவுகளை சந்திக்க வேண்டிய சூழல் காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் ஏற்படும் காரணத்தால் உங்களால் அவற்றை சமாளிக்க இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தொடை வலி போன்ற சிறு பிரச்சினைகள் இன்று உங்களிடம் காணப்படும்.




இன்று அவ்வளவு சிறப்பான நாள் அல்ல. ஏற்ற இறக்கங்கள் காணப்படும். உங்கள் மனதை தெளிவாக வைத்தி ருக்க வேண்டியது அவசியம்.

இன்று பணிகள் அதிகமாகவும் அதில் நீங்கள் மும்மரமாகவும் இருக்க வாய்ப்புள்ளது. அனுசரித்து போவதன் மூலம் உங்கள் பணிகளை வெற்றிகரமாக முடிக்க லாம்.

உங்கள் துணையுடன் உணர்சிவசப்படுவீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று பண வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

அதிக பணிகள் காரணமாக சோர்வுடன் காணப்படு வீர்கள். தலைவலி காணப்படும். இதனால் அசௌகரி யமாக உணர்வீர்கள். இருந்த போதிலும் மன ஆற் றல் காரணமாக நீங்கள் இதனை சமாளிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி திட்டமிட்டு பணியாற்றுவது சிறந்தது. சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழக்கும் வாய்ப்பு உள்ளது. அமைதியாக செயல்பட வேண்டும்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங் கள் பணிகளை முடிக்க முன் கூட்டியே திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன்சண்டை ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். உங்கள் சொந்த பந்தங்களுடன் அன்பை வளர்த்துக் கொள்வது நல்லது.

இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல. நீங்கள் தேவையின்றி பணத்தை செலவு செய்ய நேரலாம்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி மற்றும் தலைவலி போன்ற பாதிப்புகள் காணப்படும். தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று விரைவில் முன்னேற்றம் கிடைக்கும் குறைந்த முயற்சியில் இன்று உங்களுக்கு வெற்றி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் இருப்பீர் கள்.

புதிய வேலைக்கான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் திறமையை உணர்ந்து கொள்ள இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளுங் கள்.

இன்று உங்கள் உடன் பிறந்தோரிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வீர்கள். உங்கள் குடும்பத்துடன் தரமான நேரத்தை செலவிடுவீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். இன்று உங் களால் பணத்தை அதிக அளவில் சேமிக்க இயலும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று உங்களிடம் திருப்தியும் தைரியமும் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.04.2024




இன்று பல செயல்கள் காணப்படும். நீங்கள்புத்திசாலித்தனத்தைபயன்படுத்தி உங்கள் காரியங்களை மேற்கொள்ள வேண்டும். எந்த செயலையும் செய்வ தற்கு முன் ஒன்றிற்கு இரண்டு தடவை யோசித்து செயல்படவேண்டும். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

பணியில் மாற்றங்கள் காணப்படும். பயணம் மேற் கொள்ள வேண்டியிருக்கும். பணியிடத்தில் பிறருடன் பேசுவதற்கு முன் உங்கள் எண்ணங்களில் கவனம் செலுத்துங்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று செலவுகள் சுமையாக காணப்படும். உங்கள் பணத்தை சாதுர்யமாக நிர்வகிப்பது கடினமாக இருக்கும்.

கண் எரிச்சல் போன்ற பாதிப்பு காணப்படும். பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியப் பரிசோதனை மேற்கொள்வது நல்லது.




இன்று மந்தமான நாளாக இருக்கும். உங்கள் பணிகளை எளிதாக கையாள்வது கடினமாக இருக்கும். வெற்றி காண நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். இதனால் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் முறை யுடன் பணியாற்ற இயலாது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் நெருக்கத்தை இன்று தவிர்க்க வேண் டும்.

இன்று நிதி வளர்ச்சி அவ்வளவு சிறப்பாக இருக் காது. பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள் ளது.

இன்று அஜீரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. தக்க நேரத்தில் உணவை உட்கொள்ள வேண்டும்.




இன்று சராசரி பலன்கள் கிடைக்கும் நாள். நீங்கள் விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்க வேண்டும். இல்லையெனில் பிறகு வருத்தப்பட நேரும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் சக பணியாளர்களுடன் உறவுமுறையில் சில பிரச்சினை காணப்படும். இது பாதிக்காத வகையில் நீங்கள் அனுசரித்து செயல்படுவது சிறந்தது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. சில அமைதி யற்ற தருணங்கள் காணப்படும்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின் றது.

கால் மற்றும் தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும் உங்கள் மனது தெளிவாக இருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறை வேறி திருப்தி கிடைக்கும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாத கமாக இருக்கும்.

பணியில் சுமூகமான விளைவுகள் காணப்படும். உங்கள் திறமைக்கு உங்கள் மேலதிகா ரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள். நீங்கள் உங்கள் காதல் உணர்வுகளை இன்று வெளிப்படுத்த இயலும்.

நிதிநிலைமை வளர்ச்சி தரும் வகையில் இருக்கும். உங்கள் பணத்தை நீங்கள் புத்திசாலித் தனமாக கையாள்வ ீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் இன்று சிறந்த தேக ஆரோக்கியத்தை பரா மரிபீர்கள்.

